# இலங்கை பரீட்சைத் திணைக்களம்
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2018

அரச நிதிச் சுற்றுநிருப இலக்கம் 402 இற்கு அமைய பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்ல.

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1.1 அறிமுகம் | 3 |
| | 1.2 பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செய்தி | 4 |
| | 1.3 இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் இலட்சியக்கூற்றும் பணிக்கூற்றும் | 5 |
| | 1.4 இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பயணப்பாதை | 6 - 10 |
| 2. | பரீட்சைத் திணைக்களத்தின் பணிகளும் பொறுப்புக்களும் | 11 - 13 |
| | 2.1 பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேறுகள் கிளை | 14 - 15 |
| | 2.2 இரகசியக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை | 15 - 16 |
| | 2.3 மதிப்பீட்டுக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை | 16 - 18 |
| | 2.4 விசாரணைக் கிளை | 18 - 19 |
| | 2.5 சான்றிதழ் கிளை | 19 - 22 |
| | 2.6 ஆய்வு, அபிவிருத்திக் கிளை | 22 - 26 |
| | 2.7 ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை | 26 - 28 |
| | 2.8 இரகசியக் (நிறுவனப் பரீட்சைகள்) கிளை | 28 - 29 |
| | 2.9 மதிப்பீட்டுக் (நிறுவனப் பரீட்சைகள்) கிளை | 29 |
| | 2.10 பெறுபேறுகள் கிளை | 30 |
| | 2.11 நிர்வாகக் கிளை | 31 |
| | 2.12 தபாற் கிளை | 31 - 32 |
| | 2.13 கணக்குக் கிளை | 32 - 33 |
| | 2.14 வழங்கற் கிளை | 33 - 34 |
| | 2.15 அச்சகம் | |
| | 2.15.1 அச்சகம் (இரகசிய) | 35 - 36 |
| | 2.15.2 அச்சகம் (இரகசியமல்லாத) | 36 |
| | 2.16 கணினிக் கிளை | 37 - 39 |
| | 2.17 தரவு நிரற்படுத்தற் கிளை | 39 |
| | 2.18 திட்ட அமுலாக்கல், கண்காணிப்புக் கிளை | 39 - 40 |

# அறிமுகம்

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்வதற்கும் சிறந்த அடித்தளமாக அமைவது கல்வியாகும். கல்வியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடையச் செய்வதில் மதிப்பீடு, கணிப்பீட்டுச் செயன்முறைகளினூடாகச் சிறப்பான சேவையொன்று மேற்கொள்ளப்படுகின்றது.

மதிப்பீடு, கணிப்பீட்டுச் செயன்முறைகளூடாக தேசத்தின் எதிர்கால அபிவிருத்திக்குத் தேவையான மனிதவளத்தைத் தெரிவுசெய்து வழங்கும் உயர்ந்த பணியாக தேசிய மதிப்பீட்டுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை பரீட்சைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. இலட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கையை வென்று சகல பரீட்சைகளையும் மிக உயர் இரகசியத்தன்மையுடனும் பொருத்தப்பாட்டுடனும் நடாத்தும் பணியைத் தன்னகத்தே கொண்டு தேசத்தின் நுண்ணறிவுப் பிரவாகத்தை நெறிப்படுத்தும் நிறுவனமாக இத் திணைக்களத்தை அறிமுகப்படுத்தலாம்.

தொழில்நுட்ப விருத்தியுடன் நாளுக்கு நாள் மாற்றமடைந்துவரும் உலகிலுள்ள உயர் பண்புத்தரத்தினையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கும் முகமாக சகலருக்கும் பொதுவானதாக பரீட்சையை நடாத்துதல் சவாலாகும். அச்சவாலை வெற்றிகொண்டு சர்வதேச நியமங்களுக்கமைய பரீட்சையை நடாத்துவதன் விளைவாக இலங்கையின் பரீட்சைச் சான்றிதழ் உலகிலே மிகவும் உயர் மதிப்பைப் பெற்றுள்ளது.

நவீன உலகிற்குப் பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க சேவை வழங்கும் மதிப்பீடு, கணிப்பீட்டு நியமங்களை அடைந்த சிறந்த அரச நிறுவனமாக தேசிய, சர்வதேச மட்டத்தில் அங்கீகாரம் பெற்ற நிறுவனமாக குறிப்பிடலாம்.

# பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் செய்தி

கல்வியானது ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்திச் செயன்முறைக்கு பிரதான அடித்தளமாக அமையும். எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்கான சமநிலை ஆளுமையுடன் தொழில்நுட்பங்களைக் கையாளும் தேர்ச்சிகளும் மிக்க பிள்ளைகளை உருவாக்குவதற்காக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகள் சிறப்பானவை. கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் இறுதியில் மாணவர்களின் அடைவை கணிப்பிடுதல். அனைத்து அரச சேவைகளுக்குமான ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடை தாண்டல் போன்ற பரீட்சைகளை உயர் நம்பகத்தன்மையுடனும் சரியான முறையிலும் நடாத்தி பெறுபேறுகளை சான்றிதழ்படுத்துதல் எமது பிரதான பொறுப்பாகும்.

2018ஆம் ஆண்டில் நாம் பல வெற்றிகளை பெற்றுக்கொண்டோம். இந்த செயற்றிறன் அடைவு அறிக்கை எமது முன்னேற்றங்கள், பின்னடைவுகள் தொடர்பான ஒரு தெளிவான பகுப்பாய்வை வழங்கும்.

நவீன தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தல் மூலமாக மிகவும் வினைத்திறனான ஒரு சேவையை மக்களுக்கு வழங்குவதற்காக புதிய பல வேலைத்திட்டங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அதன் பிரதி பலன்கள் தற்போது மக்களை சென்றடைகின்றன.

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் குறிப்பிட்ட நேர சட்டகத்துள் செய்து முடிக்க எதிர்பார்க்கும் நோக்கங்கள் பயனுறுவாய்ந்த விதத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அர்ப்பணிப்பு, நோக்கங்களை அடைதல், தொழில் நிபுணத்துவத்துடன் குழுவாக பணியாற்றல் என்பன திணைக்களத்தின் சிறப்பியல்புகளாகும்.

2018ஆம் ஆண்டில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் சவால்களை வெற்றி கொண்டு சிறந்த முறையில் முன்னோக்கிச் செல்ல வழிகாட்டுவதற்கான தலைமைத்துவத்தை ஏற்க முடியுமாக இருந்தமைக்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். அதன் பொருட்டு எனக்கு சக்தியை வழங்கிய அனைவருக்கும் எனது நன்றியைக் கொள்கிறேன். 21ஆம் நூற்றாண்டின் ஆயிரமாம் ஆண்டுக் கல்விக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு மதிப்பீட்டு, கணிப்பீட்டுச் செயன்முறைகள் மேலும் நவீனமயப்படுத்தப்படல் வேண்டும் என்பது எனது அபிலாசை ஆகும். தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவையின் கீழ் மேற்கொள்ளப்படும் தேசிய பங்களிப்புக்களை மேலும் பரவலடையச் செய்வதற்கும் அர்த்தமுடைதாக்குவதற்கும் நடவடிக்கையெடுக்க எதிர்பார்க்கப்படுவதுடன அதற்குத் தேவையான சகல வழிமுறைகளூடாக சாதனைகளையும், பண்புத்தரம் வாய்ந்த அபிவிருத்தியையும் அடைவது எமது எதிர்கால எதிர்பார்ப்பாகும்.

பி. சனத் பூஜித
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

## இலட்சியக் கூற்று

மதிப்பீட்டு முறைகள், செயன்முறைகள் மற்றும் பரீட்சை நடாத்துதலின் ஏனைய தொழிற்பாடுகளின் உன்னத நிலமைகளூடாக கற்றல் - கற்பித்தலை வளர்ச்சி பெறச் செய்வதில் தலைமைத்துவம் வழங்குதல்.

## பணிக் கூற்று

தேசிய தேவைகளுக்கு இயைந்த, நம்பகத்தன்மையையும், பெறுமானத்தையும் பேணுகின்ற மதிப்பீட்டுக் கருவிகளையும் நுட்ப முறைகளையும் உபயோகிப்பதனூடாகக் கல்வி அடைவு, சான்றுபடுத்தல் தொடர்பான செயற்பாடுகளை மேம்பாட்டிற்கு இட்டுச் செல்லல்.

# இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பயணப் பாதை

பரீட்சைகளை நடாத்துவது தொடர்பாக இலங்கை மிக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. 1869 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் "பொதுக் கற்பித்தல் திணைக்களம்" ஆரம்பிக்கப்பட்டு கல்வியின் முழுமையான நிர்வாகம் அதனிடம் கையளிக்கப்பட்டது. ஆரம்பத்தில் பரீட்சை நடாத்துவது தொடர்பான பொறுப்பு பொதுக் கற்பித்தல் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது. பிற்காலத்தில் பரீட்சைக்கென நியமிக்கப்பட்ட பரீட்சை அதிகாரி ஒருவரின் கீழ் கல்வித் திணைக்களத்தில் பரீட்சைகளுக்காக தனியான ஒரு பிரிவு நிறுவப்பட்டது. ஆண்டுதோறும் பரீட்சைகளின் எண்ணிக்கையும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கையும் அதிகரித்தமையால் அப்போதிருந்த பரீட்சைகள் கிளைக்கு பாரியளவான குறித்த பணிகளை நிறைவேற்றுவதில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டன. அதனால் 1951 ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி பரீட்சை ஆணையாளர் ஒருவரின் கீழ் பரீட்சைத் திணைக்களம் எனும் பெயரில் தனியான திணைக்களம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக 1862 இல் அரச சேவையின் கனிஷ்ட ஊழியர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொதுப் பரீட்சையொன்று நடைபெற்றது. இப்பரீட்சையுடன் தொடர்புடைய சகல நிர்வாக பொறுப்புக்களும் 1834 இல் அமைக்கப்பட்ட மத்திய பாடசாலை ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டிருந்தது.

இலங்கையின் பிரபல பாடசாலைகளின் மாணவர்கள் மாத்திரம் தோற்றிய தேசிய ரீதியிலான பொதுப் பரீட்சையொன்று 1862இல் நடாத்தப்பட்டது. அப்பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை 1862 தொடக்கம் 1868 வரை படிப்படியாக அதிகரித்த போதிலும் அதன் பின்னர் சடுதியாகக் குறையும் நிலை தோன்றியதனால் அதற்குப் பரிகாரமாக கேம்பிறிஜ் பரீட்சைகள் தொடர்பான தேசிய கட்டுப்பாட்டுச் சபையினதும் இலண்டன் பல்கலைக்கழகத்தினதும் பரீட்சைகளை இலங்கையில் நடாத்த அரச கல்விச் சபையின் பணிப்பாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முதலாவது கேம்பிறிஜ் தேசிய பரீட்சை 1880 இல் நடாத்தப்பட்டது. பின்னர் 1916 இல் "கேம்பிறிஜ் சிரேஷ்ட" பரீட்சை நடாத்த ஆரம்பிக்கப்பட்ட அதே வேளை 1882 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் ஜுன் மாதத்திலும் முதன் முறையாக இலண்டன் மெட்ரிகுலேஷன் பரீட்சை நடாத்தப்பட்டது. 1952 நவம்பர் மாதத்தில் முதன் முறையாக இலண்டன் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை இலங்கையில் நடாத்தப்பட்டது.

அரச துறையில் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்காக சுயமொழி ஆசிரிய சான்றிதழ் பரீட்சை 1878 இல் முதன் முதலில் நடாத்தப்பட்டது. ஆங்கில ஆசிரியர்களுக்காக அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்று முதன்முறையாக

1910 இல் ஆரம்பிக்கப்பட்ட அதே வேளை வருட இறுதியில் நடைபெற்ற பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கு ஆங்கில II ஆந் தரப் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்பட்டது. 1929 இல் முதன் முறையாக "ஆரம்ப ஆசிரியர் பரீட்சை" நடாத்தப்பட்டது.

இலங்கை பரீட்சைத் திணைக்களம் 1952 இல் வெளியிட்ட நிர்வாக அறிக்கையின்படி அவ்வருடத்தில் 8 தேசிய பரீட்சைகளும் 27 வெளிநாட்டுப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டிருந்தன.

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் மூலம் பொதுக் கல்விப் பரீட்சைகள் (பாடசாலை பரீட்சைகள்), தொழில்நுட்பக் கல்வி நிறுவனப் பரீட்சைகள், அரச அல்லது அரசின் உதவி பெறும் நிறுவனங்களுக்கான பரீட்சைகள் உட்பட சகல பொதுப் பரீட்சைகளையும் ஒழுங்கு செய்து நடாத்தும் அதிகாரம் பரீட்சை திணைக்களத்திற்குக் கிடைத்தது.

1960 களின் இறுதிக் காலப்பகுதியில் இத்திணைக்களத்தில் தரவு நிரற்படுத்தும் கிளை என்ற பெயரில் புதிய கிளையொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் திணைக்களத்திற்கான கணினிப் பிரிவொன்று அச்சமயம் இல்லாதிருந்தமையால் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கணினிப்பிரிவும் பின்னர் இலங்கை மத்திய வங்கியின் கணினிப்பிரிவும் இத்திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றின. 1969 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களைத் தயாரித்தல், தரவு நிரற்படுத்தல் உள்ளிட்ட சகல செயற்பாடுகளும் பரீட்சைத் திணைக்களத்தில் செய்துகொள்ளக் கூடியவாறு கணினிப் பிரிவொன்று நிறுவப்பட்டது.

நவீன தொழில்நுட்பத்துடன் இணைந்து இலங்கை பரீட்சைத் திணைக்களம் வினைத்திறன் மிக்க சேவையை வழங்க கணினித் தொகுதியொன்றை நிறுவி நிறுவனத்தினுள்ளேயே சகல கணினிச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள ஆரம்பித்தமை மிகப் பெரிய வெற்றியாகும். அதே போன்று ஆரம்பகாலத்திலிருந்தே இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கென அச்சகமொன்று காணப்பட்டதுடன் தற்கால டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அச்சுப் பணிகளை அதிக வினைத்திறனுடனும் உயர்தரத்திலும் மேற்கொள்ளக் கூடியவாறு அச்சகம் மேம்படுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்பத்துடன் இணைந்து, பாடசாலைப் பரீட்சைகளின் பெறுபேறுகளை இணையத்தினூடாக வெளியிட நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம் நாடளாவிய ரீதியில் பரந்துள்ள இலட்சக்கணக்கான மாணவர்கள் அதிக நன்மையடைந்துள்ளனர்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம் எனும்போது மலே வீதி என்ற பெயரே எல்லோரதும் நினைவிற்கு வரும். அங்கு ஆரம்பித்து பத்தரமுல்ல, பெலவத்தையில் அமைந்துள்ள பாரிய கட்டடத்தொகுதி வரையில் வந்த பயணம் ஒரு பாரிய வெற்றியாகும்.

சகல வினாப்பத்திர மதிப்பீட்டுப் பணிகளும் அறிவுறுத்தற் கருத்தரங்கு முறையில் நடாத்த ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் அப்பணியை முறையானதாகவும் சரியானதாகவும் மேற்கொள்ள முடிந்தமை மதிப்பீட்டுச் செயன்முறையில் ஏற்பட்ட ஒரு பாரிய மாற்றமாகும். பரீட்சைகளை நடாத்துவதற்கு மேலதிகமாக சர்வதேச மதிப்பீட்டு

முறைகளைக் கவனத்திற் கொண்டு பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறையொன்றை ஆரம்பித்தமை, அதனை மிகப் பிரபலமான முறையாக மாற்றுவதற்கான முறையியல்களை தயாரித்தமை, மதிப்பீட்டு உபகரணங்களை அறிமுகம் செய்தமை, மாதிரிகள் வழங்கப்பட்டமை, பயிற்சியாளர்களும், மதிப்பீட்டாளர்களும் பயிற்றுவிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகள் மூலமும் பரீட்சைத் திணைக்களம் பாடசாலையுடன் நெருக்கமாகச் செயற்படும் நிறுவனமாக மாறியுள்ளது. மேற்படி பாடசாலை மட்ட மதிப்பீட்டின் தேர்ச்சி மட்டங்களைச் சான்றிதழிலில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை பாடசாலை மட்டக் கணிப்பீட்டை அதிக வலுவுள்ளதாக்கக் காரணமாகியது.

நாம் கடந்து வந்த பாதையில் அடைந்த முக்கிய ஒரு வெற்றியாக சான்றிதழ்படுத்தும் செயன்முறைமை ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டமையைக் குறிப்பிடலாம். இதன்போது கல்விச் சான்றிதழ்கள் மிக உயர்ந்த தரத்தில் பதிப்பிக்கப்பட்டு ஒரு நாள் சேவையின் மூலமும் சாதாரண சேவையின் மூலமும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை முக்கியமானதாகும். தினமும் பெருந்தொகையானோர் இச்சேவையின் மூலம் பயன்பெறுவதுடன் வெளிநாட்டுக் கல்வி, தொழில்வாய்ப்புக்களையும் விண்ணப்பதாரிகளுக்கு பரந்த வசதிகள் இதன்மூலம் கிடைத்துள்ளது.

பரீட்சைகளை நடாத்துவதுடன் நின்று விடாமல் இலங்கை பரீட்சைத் திணைக்களமானது பாடசாலைக் கட்டமைப்பிலுள்ள மாணவர் அபிவிருத்திக்குத் தேவையான பல நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளது. வலய, மாகாண மட்டங்களில் பெறுபேறுகளைப் பகுத்தாய்ந்து எல்லாப் பாடங்கள் தொடர்பாகவும் மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுவதனால் மாணவர்களின் அபிவிருத்தி தொடர்பாக தெளிவான முடிவுகளை எடுக்க வாய்ப்பேற்படுகின்றது.

பாடசாலைப் பரீட்சைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக முற்சோதனைக்கு (Pre-Test) உட்படுத்தப்பட்ட வினாக்களை உள்ளடக்கிய உருப்படி வங்கியொன்றைத் தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் தற்போது க.பொ.த (சா.தர) மற்றும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சைகளின்போது அவ்வினாக்களைப் பயன்படுத்தக் கூடியளவிற்கு அவை அபிவிருத்தியடைந்துள்ளன.

பரீட்சைகளை நடாத்துவதற்கும் மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கும் பெரும்பாலான பாடசாலைகளை வார இறுதி நாட்களில் மாத்திரம் பயன்படுத்த முடிகின்றமை பெறுபேறுகளை வெளியிடுவதனை வினைத்திறனுடன் மேற்கொள்வதில் பாதகமானதாக உள்ளது. வார நாட்களில் பரீட்சைகளை நடாத்துவதற்கும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காகவும் பரீட்சை திணைக்களச் சுற்றாடலில் பல்பணிக் கட்டடத்தொகுதியொன்றை நிறுவும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2019ஆம் ஆண்டு இக்கட்டடம் கட்டிமுடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் தரம் மிக்க சேவைகளை பொதுமக்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் சிறப்பைப் பிரதிபலிக்கும் வகையில் மின்னஞ்சல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் கீழுள்ள இலங்கை தகவல் , தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இலங்கையின் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் மிகச் சிறந்த நிறுவனமாக இலங்கை பரீட்சைத் திணைக்களம்

மதிப்பிடப்பட்டு “National Best E- Content Award - ஈ - சுவாபிமானி 2014” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. அதன் அடுத்த முன்னேற்றப்படியாக எதிர்காலத்தில் நிகழ்நிலை சேவை மூலம் (Online) பரீட்சை விண்ணப்பங்களைப் பெற்று பரீட்சைகளை நடாத்தவும் அதன் மூலம் சர்வதேச நியமங்களுக்குத் தேவையான நவீன தொழில்நுட்ப மதிப்பீட்டு முறையியல்களைப் பயன்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அரச கணக்கியல் குழுவின் மூலம் 38 அரச நிறுவனங்களிடையே நடாத்தப்பட்ட மதிப்பீட்டிற்கேற்ப ஊழல் மோசடிகள் இல்லாத நவீன உலகிற்குப் பொருத்தமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு செயற்றிறனான சேவையை வழங்கும் மிகச்சிறந்த அரச நிறுவனமாக பிரகடனப்படுத்தப்பட்டமையானது 2016ஆம் ஆண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களமானது பெற்றுக் கொண்ட விசேட வெற்றியொன்றாக இனங்காணலாம்.

அரசின் பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பங்களிப்பதில் இலங்கைப் பரீட்சைத் திணைக்கள வளாகத்துள் 250 கிலோபைட் கொள்ளளவு கொண்ட சூரிய சக்தி செயற்றிட்டத்திற்காக மின்வலு, மீள்வலு சக்தி அமைச்சின் அனுசரணையுடன் அரச நிறவனத்தில் தாபிக்கப்பட்ட பாரிய சூரிய ஒளித்தொகுதி முறைமைக்கு வழிநடத்தப்பட்டமை 2017ஆம் ஆண்டில் திணைக்களம் ஈட்டிய மிகப்பெரும் வெற்றியாகும்.

வினாப்பத்திரங்களை அச்சிட்டு, பொதி செய்யும் செயன்முறையின் பண்பையும் செயற்திறனையும் மேம்படுத்துவதற்காக தானியங்கி “Turn-Key Web" அச்சிடும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமை 2018ஆம் வருடத்தில் வினாப்பத்திரங்கள் அச்சிடும் செயன்முறை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னோக்கிய படி எனலாம்.

அரச நிறுவனங்களைப் போன்று பகுதி அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களினது பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்தல் பரீட்சைத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுவதுடன் வருடாந்தம் பாரிய எண்ணிக்கையிலான சான்றிதழ்கள் பல்வேறு நிறுவனங்களினால் உறுதிப்படுத்துவதற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இவ் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் காரணத்தினால் பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் தாமதமடைவதை தடுப்பதற்காக நிகழ்நிலை முறையின் மூலம் (Online) பெறுபேறுகளை உறுதிப்படுத்தும் சந்தர்ப்பத்தை வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் கல்வி அமைச்சிற்கும் வழங்கியதன் மூலம் இச் செயற்பாட்டின் செயற்றிறனை அதிகரிக்கப்பட்டுள்ளது. இச் செயற்பாடு பரீட்சைத் திணைக்களத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு அதன் இரகசியத்தன்மையை பேண முடியும் என்பதனால் இவ் ஏற்பாடு மிகவும் சிறந்த பெறுபேற்றை பெற்றுத்தரும். எதிர்காலத்திலே ஏனைய அரச நிறுவனங்களுக்கும் இச் சேவையை விரிவுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்பாடல் தொழில்நுட்ப விருத்தியுடன் சர்வதேச ரீதியான பரீட்சைகளை நிகழ்நிலை முறைடையில் (Online) நடாத்துவதற்கு மிகவும் பயனுறுதி வாய்ந்த முறைமையாக இருந்ததனால் இலங்கை பரீட்சைத் திணைக்கள வரலாற்றிலே முதன் முறையாக நிகழ்நிலை முறைமையில் பரீட்சையை நடாத்துவதற்காக 2018ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய 12ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்காக நடாத்தப்படும் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சையை நிகழ்நிலை முறைமையில் நடாத்துவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் கொண்ட

தொகுதியொன்று தயாரிக்கப்பட்டு அதற்காக மாணவர்களுக்கு பயிற்சி வழங்கும் முன்னோடிப் பயிற்சிப் பரீட்சையொன்றை வெற்றிகரமாக நடாத்த முடிந்தது. இதற்கமைவாக எதிர்காலத்தில் நிகழ்நிலை முறைமையில் நடாத்தக்கூடிய பரீட்சைகள் தொடர்பாக கவனஞ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

க.பொ.த.(சா.தர)ப் பரீட்சையிலே அழகியல் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகளை எழுத்துப் பரீட்சைகள் நிறைவுற்ற பின்னர் நடாத்தப்படுவது திணைக்களத்தின் நடைமுறையாக இருந்தது. எனினும் எழுத்துப் பரீட்சையின் பின்னர் செய்முறை பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டதனால் 2018ஆம் ஆண்டில் எழுத்துப் பரீட்கைளுக்கு முன்னர் ஒக்ரோபர் மாதத்தில் அழகியல் பாடங்களுக்கான செய்முறைப் பரீட்சைகளை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால் செய்முறைப் பரீட்சைகள் தொடர்பாக மாணவர்களின் ஈடுபாடு அதிகரித்திருப்பது அவதானிக்கக்கூடிய விசேட அம்சமெனலாம்.

பரீட்சார்த்திகள் ஆரோக்கியமான உளச்சூழலில் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக 03 மணித்தியால கட்டுரை வகை வினாப்பத்திரங்களுக்கு வினாக்களை வாசிப்பதற்கும் தெளிவு பெறுவதற்குமாக 10 நிமிடங்கள் மேலதிக வாசிப்பு நேரம் 2018ஆம் ஆண்டு க.பொ.த.(உ.தர)ப் பரீட்சையிலிருந்து வழங்கப்படுகின்றது. இது பரீட்சைகளுக்குத் தோற்றும் போது மாணவர்களுக்கு ஏற்படும் மன அழுத்தங்கள் குறைப்பதற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

பல்வேறு பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பாக நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ள இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஆரம்ப வழிகாட்டியாகச் செயற்பட்ட பரீட்சை ஆணையாளர் திரு எல்.எல்.கே. குணதுங்க தொடக்கம் இற்றை வரை 11 பரீட்சை ஆணையாளர்களும் 08 பரீட்சை ஆணையாளர் நாயகங்களும் இத்திணைக்களத்தின் அபிவிருத்திக்காக நம்பகத்தன்மையும் பொருத்தப்பாடும் கொண்ட மதிப்பீட்டு முறைகளை அறிமுகப்படுத்தி மதிப்பீட்டு, கணிப்பீட்டுச் செயன்முறையை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு வருவதற்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் அரும்பணியாற்றியுள்ளனர்.

ஆரம்ப காலத்திலிருந்தே பரீட்சைத் திணைக்களத்தில் காணத்தக்க சிறப்பியல்பு யாதெனில் திணைக்களத்திற்கே சிறப்பாயமைந்த ஒழுக்கநெறிக் கோவையொன்று நடைமுறைப்படுத்தப்படுவதும் தொலைநோக்குடன் தாபிக்கப்பட்டுள்ள நிர்வாகக் கட்டமைப்புமாகும். 1952ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்படும் நிர்வாக அறிக்கைகளின்படி அவர்களிடம் காணப்பட்ட நேர்மை, நம்பகத்தன்மை, அர்ப்பணிப்பு, வினைத்திறனான நிருவாகம், ஆற்றல், தொலைநோக்கு, திறன், கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் தன்மை ஆகியன இத்திணைக்களத்தின் மீது தற்காலத்தில் மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்பக் காரணமாகியுள்ளன.

# பரீட்சைத்திணைக்களத்தின் பணிகளும் பொறுப்புக்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின்படி இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பரீட்சைகளை நடாத்துவது தொடர்பாக சட்டரீதியான அதிகாரமுள்ள ஒரேயொரு நிறுவனமாக மாற்றம் பெற்றது. அன்றிலிருந்து இன்று வரை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வருடாந்தம் 300 இற்கும் அதிகளவிலான பரீட்சைகள் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்படுகின்றன.

தற்காலத்தில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் மதிப்பீட்டுச் சேவைகள், பரீட்சித்தல் சேவைகள் என்றவாறு பாடசாலைப் பரீட்சைகள், நிறுவனம் சார் பரீட்சைகள் ஆகிய இரண்டு பிரிவுகளாகச் செயற்படுகின்றது.

திணைக்களத்தின் பிரதான பணி பல்வேறு வகையான பரீட்சைகளை நியாயமான முறையில் நடாத்துவதாகும். பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- பாடசாலைப் பரீட்சைகள்
- நிறுவனம்சார் மற்றும் தொழில்சார் பரீட்சைகள்
- சான்றிதழ் பரீட்சைகள்
- பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைகள்
- உள்நாட்டு / வெளிநாட்டு நிறுவனப் பரீட்சைகள்

2018 ஆம் ஆண்டில் பாடசாலைப் பரீட்சைகளுக்காக மாத்திரம் 1,526,156 பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர். அப்பரீட்சைகளின் மதிப்பீட்டு நடவடிக்கைகளை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் பரீட்சகர்களாகவும் மீளாய்வு போன்ற பணிகளிலுமாக 51,584 பரீட்சகர்கள் ஈடுபட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டில் ஏனைய ஆட்சேர்ப்புப் பரீட்சைகள், சான்றிதழ் பரீட்சைகள், வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைகள், பதவி உயர்வுப் பரீட்சைகள், வெளிநாட்டுப் பரீட்சைகள் ஆகியவற்றுக்கு 445,913 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்திருந்ததுடன் பாடசாலைப் பரீட்சைகள், ஏனைய பரீட்சைகளின் மேற்பார்வைப் பணிகளுக்காக அண்ணளவாக 151,634 எண்ணிக்கையான அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் இலட்சக் கணக்கான பரீட்சார்த்திகளுக்காக மிகச் சரியாகவும் இரகசியத் தன்மையுடனும் நியாயமான முறையில் பரீட்சைகளை நடாத்துதல் இத்திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும். அதேவேளை நன்கு பயிற்சி பெற்ற பரீட்சைப் பணிக்குழுவினராக இரண்டு இலட்சத்திற்கும் அதிக எண்ணிக்கையானோர் பரீட்சைச் செயன்முறையில் இணைந்துள்ளனர்.

பரீட்சை நிர்வாகத்தை அதிக பயனுடையதாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் செயற்படுத்தக் கூடியவாறு பரீட்சைப் பணிகளில் ஈடுபடத் தகைமையுள்ளோரின்

குழுமம் அமைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கு முறைப்படி பயிற்சி அளிப்பதற்காக விசேட செயற்றிட்டமொன்றையும் பரீட்சைத் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.
தற்போது சில மாவட்டங்களில் ஆளணியினர் இதற்காகப் பயிற்றப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் பரீட்சை நிர்வாகப் பணிகளில் மேற்படி குழுமத்திலிருந்து பயிற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

நவீன தொழில்நுட்பத்தின் முன்னேற்றத்துடன் பரீட்சைகள் தொடர்பான முறைகேடுகளும் அதிகரித்து வருகின்றன. பரீட்சார்த்திகளாலும் நோக்குநர்களினாலும் புரியப்படுகின்ற சகல முறைகேடுகளையும் விசாரித்து குற்றத்தின் தன்மைக்கேற்ப தண்டனை வழங்கப்படுகின்றது. 2018ஆம் ஆண்டிலே பெரும் எண்ணிக்கையிலான விசாரணைகள் இடம்பெற்றுள்ளன. நியாயபூர்வமானதும் நம்பகத்தன்மைமிக்கதுமான பரீட்சைச் சூழலொன்றை ஏற்படுத்த வேண்டுமென இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தேவைகளுக்காகச் சான்றிதழ்களை வழங்குதல் இத்திணைக்களத்தின் முக்கிய ஒரு பணியாகும். ஒருநாள் சேவை மூலமும் சாதாரண முறையிலும் சான்றிதழ் வழங்கப்படுகின்ற அதே வேளை, சராசரியாக ஒரு நாளைக்கு ஆயிரத்துக்கும் அதிகளவிலானோர் இச்சேவையைப் பெற்றுக் கொள்கின்றனர்.

சாதாரண முறையில் சான்றிதழ் வழங்க நான்கு நாட்களைக் கொண்ட குறுகிய காலம் எடுக்கும் அதேவேளை, தற்போது இணையத்தினூடாக (Online) சான்றிதழ் வழங்குவதில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

இலங்கை பரீட்சைத் திணைக்களமானது பரீட்சைகள் நடாத்துவதுடன் மட்டும் நின்று விடாது பாடசாலைக் கட்டமைப்பில் கற்றல் கற்பித்தல் செயன்முறையினை மேம்படுத்தத் தேவையான பல பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. புதிய கல்விச் சீர்திருத்தங்களின்போதும் புதிய பாடங்களை அறிமுகஞ் செய்யும்போதும் பாடத்திட்டத் மறுசீரமைப்பின்போதும் அதற்கேற்ப வினாப்பத்திரங்களின் கட்டமைப்பைத் தீர்மானித்தல், மாதிரி வினாப்பத்திங்களைத் தயாரித்து பாடசாலைகளுக்கு விநியோகித்தல் ஆகிய பணிகளிலும் ஈடுபடுகின்றது.

க.பொ.த (சாதாரண தரம்), க.பொ.த (உயர் தரம்), தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை போன்ற தேசிய மட்டப் பரீட்சைகளின் பெறுபேறுகளை மாகாண, வலய, பாடசாலை மட்டங்களில் பகுப்பாய்வு அறிக்கைகளாகத் தயாரித்து அவற்றைப் பாடசாலைகளுக்கு விநியோகித்தல் மூலம் மாணவர்களின் பலம், பலவீனங்கள் ஆகியவற்றை இனங்கண்டு அதற்கேற்ப அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடுவதற்கான வாய்ப்பேற்படுகின்றது.

மேலும் க.பொ.த.(சா.தர), (உ.தர)ப் பரீட்சைகளின் சகல பாடங்கள் தொடர்பாகவும் மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்து பாடசாலைகளுக்கு அனுப்புதலும் எமது திணைக்களத்தால் ஆற்றப்படும் மற்றுமொரு முக்கிய பணியாகும்.

சகல சவால்களுக்கும் வெற்றிகரமாக முகங்கொடுத்து எதிர்காலத்திலும் நம்பகத்தன்மையையும் இரகசியத்தன்மையையும் சிறப்பாகப் பேணி பரீட்சை முறைகளை மிகச் சரியாக நவீனமயப்படுத்தி பரீட்சைகளை நடாத்துவதன் மூலம் மாணவர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் அதிக பயனுறுதியுள்ள சேவையொன்றை வழங்குதல் எமது பிரதான நோக்கமொன்றாகும்.

2018 ஆம் ஆண்டில் 04 இலட்சத்துக்கும் அதிகமான விண்ணப்பதாரிகளுக்கு நிறுவனம்சார் பரீட்சைகள் நடாத்தப்பட்ட அதே வேளை மேற்படி சகல பரீட்சைகளையும் எப் பிரச்சினைகளும் இன்றி நடாத்தவும் விண்ணப்பதாரிகளின் முறைப்பாடுகள் எதுவுமின்றி பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடவும் முடிந்தமையினால் இன்றுவரை மக்கள் நம்பிக்கையை மிக உயர்வாக கட்டியெழுப்பியுள்ள நிறுவனமாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் திகழ்கின்றது.

திணைக்களத்தின் சகல கிளைகளும் ஒன்றிணைந்து நம்பகம், தகுதி என்பவற்றை மிக சிறப்பாகப் பேணி நியாயமானதும் பொருத்தப்பாடுடையதுமான மதிப்பீட்டு, கணிப்பீட்டுச் செயன்முறையொன்றை நடைமுறைப்படுத்தும் தேசிய பணியில் வெற்றிகரமாக ஈடுபட்டுள்ளது.

## 2.1 பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இயங்குகின்ற இக்கிளையின் மூலம் பாடசாலைத் தொகுதியுடன் தொடர்புபட்ட தேசிய மட்டப் பரீட்சைகளும் ஆசிரியர் கல்வி தொடர்பான பரீட்சைகளும் ஒழுங்கமைத்து நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றன.

க.பொ.த (உ.தர)ப் பரீட்சை, க.பொ.த.(சா.தர)ப் பரீட்சை, ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை ஆகியன இக்கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்படும் முக்கிய பாடசாலைப் பரீட்சைகளாகும்.

இவற்றுக்கு மேலதிகமாக தேசிய கல்விக் கல்லூரி டிப்ளோமா இறுதிப் பரீட்சை, ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் இறுதிப்பரீட்சை,தேசிய கல்விக் கல்லூரி ஆங்கில, தகவல் தொழில் நுட்பவியல் கற்கைநெறிகளுக்கான நுழைவுப் பரீட்சை, பட்டதாரி அல்லாத பயிற்சி பெறாத ஆசிரியர்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பாடநெறிகளுக்கான பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதிலிருந்து பரீட்சையை ஒழுங்கமைத்து நடாத்தி பெறுபேறுகளை வெளியிடுவது வரையிலான பிரதான பணிகள் இக்கிளையினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகளாகும்.

பொறியியற் தொழில்நுட்பவியல், உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் ஆகிய பாடங்களுக்கு முறையே 8459, 5042 பரீட்சார்த்திகளுக்காக 2015 இல் ஆரம்பிக்கப்பட்ட செய்முறைப் பரீட்சைகள், 2018ஆம் ஆண்டில் முறையே 17892, 11546 பரீட்சார்த்திகள் வரையான வளர்ச்சியைக் காட்டியுள்ளதுடன் அதற்காக முறையான விதத்தில் செய்முறைப் பரீட்சைகளை நடாத்த முடிந்துள்ளது.

இலங்கையில் முதற் தடவையாக 2018 இல் பொதுத் தகவல் தொழில்நுட்பவியல் (GIT) பரீட்சை நிகழ்நிலை (Online) முறையில் நடாத்தப்பட்டது. இப்பரீட்சைக்காக மாகாண கல்விப் பணிப்பாளர்களால் கணினி தொழில்நுட்பக் குழுக்கள் அமைக்கப்பட்டு அவ் அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டதுடன் நிகழ்நிலையில் பரீட்சைகளை நடாத்துவதற்குப் பொருத்தமான விதத்தில் வலய மட்ட கணினி வள நிலையங்களையும் வினைத்திறனான முறையில் பயன்படுத்தக் கூடியதாய் இருந்தது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி விண்ணப்பதாரி ஒருவருக்காக இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை - 2018 இற்கென பரீட்சை நிலையமொன்று அமைக்கப்பட்டு இலங்கை பரீட்சைத் திணைக்கள அலுவலர்களின் பங்குபற்றலுடன் வெற்றிகரமாக நடாத்த முடிந்தது. இலங்கை பரீட்சைத் திணைக்களம் காலத்திற்கேற்றவாறு இலங்கைக்குள் மட்டுமன்றி வெளிநாட்டிலும் பரீட்சைகளை ஒழுங்கமைத்து நடாத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளமை இதன் மூலம் வெளிப்படுகிறது.

பாடசாலைப் பரீட்சைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி கிளையின் வருடாந்த வேலைத்திட்டத்தின்படி 2018.01.01 தொடக்கம் 2018.12.31 வரை ஒழுங்கமைத்து நடாத்தப்பட்ட பாடசாலைப் பரீட்சைகள் , பாடசாலைத் தொகுதியின் வேறு பரீட்சைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு.

| பரீட்சை | பரீட்சை நிலையங்களின் எண்ணிக்கை | பரீட்சார்த்தி களின் எண்ணிக்கை | பரீட்சை நடாத்தப்பட்ட காலம் | பெறுபேறு வெளியிட ப்பட்ட திகதி | பரீட்சை நிர்வாக பணிகளில் ஈடுபட்ட அலுவலர்களின் எணிக்கை |
|---|---|---|---|---|---|
| க.பொ.த (உ.தரப்) பரீட்சை 2018 | 2268 | 321469 | 06.08.2018<br>01.09.2018 | 2018.12.29 | 24260 |
| க.பொ.த(சா.தரப்)<br>பரீட்சை 2018 | 4664 | 656641 | 03.12.2018<br>12.12.2018 | 2019.03.28 | 49321 |
| பொது தகவல் தொழில்நுட்பப் பரீட்சை -2018 | 656 | 186262 | 14.10.2019<br>21.10.2019 | - | - |
| ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை - 2018 | 3050 | 355326 | 05.08.2018 | 2018.10.05 | 28950 |
| ஆசிரியர் கல்லூரி / இறுதிப் பரீட்சை -2018 | 19 | 2135 | 18.06.2018<br>01.07.2018 | 2019.02.01 | 320 |
| தேசிய கல்வியியல் கல்லூரி டிப்ளோமா மீள் வெளிவாரி இறுதிப் பரீட்சை - (2017) | 35 | 4489 | 05.03.2018<br>16.03.2018 | 2019.01.30 | 361 |

## 2.2 இரகசியக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை

பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு மற்றும் பெறுபேற்றுக் கிளையுடன் மிக நெருக்கமான தொடர்பைப் பேணும் இக்கிளையின் மூலம் ஒழுங்கமைக்கப்படுகின்ற சகல பரீட்சைகளுக்குமான வினாப்பத்திரங்களைத் தயாரிப்பதிலிருந்து இணைப்பு நிலையங்களுக்கு வினாப்பத்திரங்களை வழங்குவது வரையான சகல பணிகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு பரீட்சைக்குமுரிய பாடங்களுக்கும் தகைமையுள்ள பரீட்சகர்களைத் தெரிவு செய்கையில் நம்பகம், தகுதி என்பவற்றை உச்சமட்டத்தில் பாதுகாக்கும் விதத்தில் உயர் பண்புத்தரத்தையுடைய வினாப்பத்திரங்களை மொழிபெயர்த்தல், மிதப்படுத்தல், அவற்றை சிறந்த முறையில் இணைப்பாக்கம் செய்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரகசியத்தன்மையை முழுமையாகப் பேணி வினாப்பத்திரங்களை அச்சிடுதல், இரகசிய அச்சகத்தினுள் பொதி செய்யும் அறையில் நிறுவப்பட்டுள்ள எண்முறை (Digital) அலகிலுள்ளே மேற்கொள்ளப்படும். அச்சிடுதல் அதற்குரிய மேற்பார்வைக்காகவும், வினாப்பத்திரங்களை பொதி செய்வதற்காகவும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட குழு ஒன்று பயன்படுத்தப்படுகின்றது. வினாப்பத்திரம் தயாரிக்கும் பணியிலிருந்து அவற்றைப் பொதி செய்து இணைப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கும் வரையிலான சிக்கலான செயன்முறை இக்கிளையினால் முன்னெடுக்கப்படுகின்றது.

2018ஆம் ஆண்டுக்குரிய இரகசியக் கிளையினுள் எண்முறை (Digital) அலகினால் அச்சிடப்பட்ட வினாப்பத்திரங்கள், ஏனைய ஆவணங்கள் தொடர்பான தகவல் கீழே காட்டப்பட்டுள்ளன.

| இல | அச்சிடப்பட்டுள்ள ஆவணங்கள் | அச்சிடப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | க.பொ.த(சா.த)ப் பரீட்சை செய்முறைப் பரீட்சை - 2017 | 130,000 |
| 02 | தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா இறுதிப் பரீட்சை - 2018 | 40,000 |
| 03 | க.பொ.த(உ.த) பரீட்சை - 2018 | 460,000 |
| 04 | ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சை - 2018 | 15,000 |
| 05 | க.பொ.த(உ.த) செய்முறைப் பரீட்சை - 2018 | 325,000 |
| 06 | க.பொ.த(சா.த)ப் பரீட்சை - 2018 | 663,000 |
| 07 | க.பொ.த(சா.த)செயன்முறைப் பரீட்சை - 2018 | 160,000 |
| 08 | இரகசியக் (பாடசாலை) கிளை வேறு ஆவணங்கள் | 40,000 |
| 09 | இரகசிய (நிறுவனம் சார் பரீட்சைகள்) கிளையின் வினாப்பத்திரங்கள் | 60,000 |
| 10 | பெறுபேறுகள் (நிறுவனம் சார் பரீட்சைகள்) கிளையின் ஆவணங்கள் | 2,000 |
| 11 | கல்வி அமைச்சின் ஆவணங்கள் | 18,000 |

## 2.3 மதிப்பீட்டுக் (பாடசாலைப் பரீட்சைகள்) கிளை

இலங்கையில் க.பொ.த (சா/தர), க.பொ.த (உ.தர), பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை உட்பட பாடசாலைப் பரீட்சைகளுக்காக வருடாந்தம் இலட்சக்கணக்கான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இவற்றுக்கு மேலதிகமாக தேசிய கல்வி டிப்ளோமா, ஆசிரியர் கலாசாலை இறுதிப்பரீட்சை, சீதாவக்க பிரிவெனா ஆசிரியர் இறுதிப்பரீட்சை, பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆட்சேர்ப்புப் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இப்பரீட்சைகளின் விடைத்தாள்களைச் சரியாகவும் வினைத்திறனுடனும் மதிப்பீடு செய்வது இக்கிளையின் பிரதான பணியாகும்.

விடைத்தாள் பரீட்சகர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த தினத்தில் பெறுபேறுகளை வழங்குவதற்கான பெரும் செயற்பாடொன்று இக்கிளையின் மூலம் நடாத்தப்படுகின்றது. நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு புத்திஜீவிகளைத் தெரிவு செய்யும் பிரதான பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நம்பகத்தன்மையைப் பாதுகாக்கின்ற விசேட கிளையாக இதனை அறிமுகஞ் செய்யலாம்.

க.பொ.த (சா.தரப்) பரீட்சை 2 கட்டங்களிலும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சை 3 கட்டங்களிலும் மதிப்பிடப்படுவதுடன் குறித்த காலப்பகுதிக்குள் இச் செயற்பாடு நடைபெறுகின்றது. மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக ஒவ்வொரு பாட வினாத்தாளுக்கும் புள்ளிவழங்கும் திட்டத்தைத் தயாரிப்பதன் மூலமும், கட்டுப்பாட்டு விடைத்தாள்களை புள்ளியிடல் மூலமும், திசைமுகப்படுத்தற் பயிற்சிகளின் மூலமும்

மதிப்பீட்டுச் செயன்முறையின் பொருத்தப்பாட்டையும் ஒருமித்ததன்மையையும் பாதுகாக்க பெரும் முயற்சி எடுக்கப்படுகின்றது. பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிட்டதன் பின்னர் தனது பெறுபேறு தொடர்பாக திருப்தியடையாத பரீட்சார்த்திகளிடமிருந்து கிடைக்கின்ற மீளாய்வு விண்ணப்பங்களின் அடிப்படையில் மீள் பரிசீலனைச் செயற்பாடுகள் நடைபெறும். இதற்காக பெருமளவிலான விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்கும் அதே வேளை விடைத்தாள் பரீட்சிக்கும் பிரதம பரீட்சகர்களுடன் இணைந்து முதலில் விடைத்தாள் புள்ளியிட்டபோது தவறுகள் ஏதேனும் ஏற்பட்டுள்ளனவா என்பது பற்றி ஆராய்ந்து பார்க்கப்படும்.

சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மதிப்பீட்டு செயன்முறையை நடத்துவதுடன் நம்பகத்தன்மை, ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து கொள்வதன் மூலம் உயர் தரத்தில் மேற்கொள்வது இக்கிளையின் பிரதான பொறுப்பாகும்.

2018ஆம் ஆண்டிலே நடாத்தப்பட்ட மதிப்பீட்டு நடவடிக்கைகள் தொடர்பான விவரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பரீட்சை | மதிப்பீட்டுக்குழுக்களின் எண்ணிக்கை | | | மதிப்பீடு நடைபெற்ற காலம் | மதிப்பீட்டில் ஈடுபட்ட பரீட்சகர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | | |
| க.பொ.த(சா.தரப்) பரீட்சை 2018 | 1200 | 511 | 328 | 2018.12.23-2019.01.01<br>2019.01.08-2019.01.17 | 24,756 |
| க.பொ.த(உ.தரப்) பரீட்சை 2018 | 695 | 178 | 163 | 2018.08.23-2018.09.05<br>2018.09.11-2018.09.24<br>2018.09.18-2018.09.29 | 14,504 |
| தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை 2018 | 322 | 98 | - | 2018.08.15-2018.08.21 | 5,775 |
| தகவல் தொழில்நுட்பப் பரீட்சை 2018 | 60 | 16 | 07 | 2018.03.07-2018.03.18 | 1,400 |
| தேசிய கல்வியியல் கல்லூரி டிப்ளோமா மீள் இறுதிப் பரீட்சை - 2017 (2018) | 30 | 25 | 20 | 2018.04.21-2018.06.20 | 525<br>1,000 |
| ஆசிரியர் கலாசாலை இறுதிப் பரீட்சை - 2018 | 19 | 15 | 21 | 2018.07.17-2018.07.24<br>தனிப்பட்ட<br>2018.07.06-2018.08.30 | 300 |

| மீளாய்வு | பரீட்சார்த்திக ளின் எண்ணிக்கை | மதிப்பீடு நடைபெற்ற காலம் | மதிப்பீட்டில் ஈடுபட்ட பரீட்சகர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| க.பொ.த(சா.தரப்) பரீட்சை 2017 | 91,062 | 2018.05.30 - 2018.06.22 | 1,194 |
| க.பொ.த(உ.தரப்) பரீட்சை 2017 | 67,836 | 2019.02.11 - 2019.03.23 | 750 |
| தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை(2018) மேன்முறையீட்டைப் பரிசீலித்தல் | 20,744 | 2018.11.19 -2019.11.25 | 380 |

## 2.4 விசாரணைக் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற எந்த ஒரு பரீட்சையின் போதும் பரீட்சார்த்திகள் பரீட்சைச் சட்டதிட்டங்களை மீறக்கூடிய மோசடிகளில் ஈடுபடல், பரீட்சைக் பணிக்குழுவினர் முறைகேடாக நடத்தல் ஆகியவற்றை விசாரித்தல் இக்கிளையினால் மேற்கொள்ளப்படும் பணிகளாகும். மேலும், பரீட்சைக் கடமைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் ஈடுபட்ட மோசடிகள், முறைகேடுகள் பற்றி விசாரணைக்கு உட்படுத்தலும் அதற்கான சட்ட நடவடிக்கைகளை எடுத்தலும் இக்கிளையின் பணிகளாகும். தொழில்நுட்ப அபிவிருத்தியுடன் பரீட்சை மோசடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் அதே வேளை அவை தொடர்பாகக் கடுமையாகக் கவனஞ் செலுத்தி சட்டத்தை மதித்து நடக்கும் பரீட்சைச் சூழலை பரீட்சை நிலையங்களில் ஏற்படுத்தல் இக்கிளையினால் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. விசாரணைச் செயன்முறையின் பின்னர் பரீட்சார்த்திகள் செய்யும் தவறுகளின் தன்மைக்கேற்ப நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல் உட்பட பல்வேறு தண்டனைகள் வழங்குவதும் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களினால் செய்யும் தவறுகள் முறைகேடுகள் தொடர்பாக அவர்களைப் பரீட்சைக் கடமைகளிலிருந்து இடைநிறுத்தல் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மூலம் பரீட்சை முறைகேடுகளைத் தவிர்க்க முயற்சிக்கப்படுகின்றது.

ஒம்புட்ஸமனினாலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினாலும் விசாரணை செய்யப்படுகின்ற விடயங்கள் தொடர்பான கோவைகளைத் திறத்தல், உரிய கிளைகளுடன் இணைந்து பதில் அறிக்கைகளைத் தயாரித்தல், தேவைக்கேற்றவாறு சட்ட மாஅதிபரினால் ஆவணங்களை நீதிமன்றில் சமர்ப்பித்தல், சட்ட மாஅதிபரின் எழுத்து மூல அல்லது வாய்மொழி மூல அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் உரிய தினங்களில் உத்தியோகத்தர்கள் நீதிமன்றத்தில் சமூகமளித்தல் ஆகிய சகல சட்ட நடவடிக்கைகளும் இக்கிளையினால் ஆற்றப்படுகின்றது.

2018ஆம் ஆண்டிலே நடாத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான விவரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| பரீட்சை | அறிக்கை செய்யப்பட்ட மோசடிகளின் எண்ணிக்கை | இடை நிறுத்தம் அல்லது வேறு தண்டனை வழங்கிய எண்ணிக்கை | வெளியிடப்பட்ட பெறுபேறுகளின் எண்ணிக்கை | விசாரணை அல்லது நீதிமன்ற நடவடிக்கை காரணமாக விசாரணைகளின் முடிவடையாத எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2018 | - | - | - | - |
| க.பொ.த(சா.தரப்) பரீட்சை 2017 | 2,798 | 956 | 1,842 | - |
| க.பொ.த(உ.தரப்) பரீட்சை 2018 | 255 | 119 | 136 | - |
| நிறுவனப் பரீட்சைகள் (வருடம் முழுவதும் நடைபெறும் நிறுவனப் பரீட்சைப்பிரிவுக்குரிய பரீட்சைகள்) | 1,268 | 175 | 836 | 257 |

| | |
|---|---|
| 2018 ஆம் வருடத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு, ஒம்புட்ஸ்மன், இலஞ்சம் மற்றும் ஊழல் தொர்பாக விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 13 |
| பரீட்சை நிலையங்களிலும் மதிப்பீட்டு நிலையங்களிலும் அலுவலர்களினால் இழைக்கப்படுகின்ற தவறுகள் முறைகேடுகள் காரணமாக பரீட்சைக் கடமைகளில் இருந்து நீக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை | 122 |
| பரீட்சை நிலையங்களில் செய்யப்படுகின்ற தவறுகள் தொடர்பாக நிறுவனப் பிரிவின் பரீட்சைப் பெறுபேறுகள் இடை நிறுத்தப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை | 175 |

## 2.5 சான்றிதழ் கிளை

இது மக்களுடன் மிக நெருங்கிய தொடர்பைப் பேணியவாறு தினமும் பாரிய சேவையை வழங்கும் ஒரு கிளையாகும். இக்கிளையின் மூலம் உள்நாட்டு வெளிநாட்டுப் பயன்பாட்டிற்கான சான்றிதழ்களை வழங்கல், அரச, தனியார் நிறுவனங்களுக்காக பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்துதல் போன்ற பல பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. க.பொ.த (சா.தர) மற்றும் க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைச் சான்றிதழ்கள் தேசிய, சர்வதேச ரீதியில் பயன்படுத்தத்தக்கவாறு வெளிநாட்டு அமைச்சுடன் இணைந்து வழங்கப்படுகின்றன. நாளாந்தம் ஆயிரம் வரையிலானோர் இச் சேவையைப் பெறுவதற்காக திணைக்களத்திற்கு வருகை தருகின்றனர். ஒரு நாள் சேவையிலும் சாதாரண சேவையிலும் இச்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பல்வேறு பிரச்சினைகளுடன் வருகின்ற மக்களுக்கு வினைத்திறன் மிக்க சேவையை வழங்குதல் இக்கிளையின் பிரதான நோக்கமாகும். மேலும் பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிப்படுத்துவதற்காக அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண

சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் உட்பட சகல அரச நிறுவனங்களிலிருந்தும் இக்கிளைக்குக் கிடைக்கும் ஆயிரக் கணக்கான பரீட்சைப் பெறுபேறுகளை உறுதிசெய்தல் வினைத்திறன் மிக்கதாக நிறைவேற்றப்படுகின்றது. அரசாங்க நிறுவனங்கள் மாத்திரமல்லாது வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்தும் பெறுபேறுகளை உறுதி செய்வது தொடர்பாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் அதிகரித்து வருகின்றன.

இதற்கு மேலதிகமாக 2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் நிகழ்நிலை முறைமையினூடாக (Online) பெபேறுகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் வசதி நாடுபூராகவும் அமைந்துள்ள வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் கல்வி அமைச்சுகளிடம் வழங்கப்படல்.

**2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் பற்றிய விவரங்கள்**

| சேவை விவரம் | ஒருஅலகின் பெறுமதி ரூபாய் | அலகுகளின் எண்ணிக்கை | வருமானம் ரூபாய் |
|---|---|---|---|
| ஒரு நாள் சேவை மூலம் தேசிய, சர்வதேச சான்றிதழ் வழங்கல்<br>I. க.பொ.த(சா.தரம்), க.பொ.த(உ.தரம்), பௌத்தஅறநெறி ஆசிரியர், ஆரம்பப் பிரிவேனா, அல்ஆலிம் இஸ்லாம் தீனியா, இந்து அறநெறி ஆசிரியர்,தேசிய நடன, / சங்கீதப் பரீட்சைகள்,மேலைத்தேய சங்கீதப் (அறிமுறை/செய்முறை)பரீட்சைகள்,தொழில்நுட்பக்கல்லூரிப் பரீட்சைகள், தகவல் தொழில்நுட்பப் பரீட்சைகள் ஆகிய பரீட்சைகளின்சான்றிதழ்கள்,ஆசிரிய கலாசாலைச் சான்றிதழ்கள் வழங்குதல். | ரூ 600.00 | 131,432 | 78,859,200.00 |
| II. ஒரு நாள் சேவை மூலம் மேற்படி சான்றிதழ்களின் மேலதிக சான்றிதழை வழங்குதல். | ரூ.300.00 | 22,080 | 6,624,000.00 |
| **ஒரு நாள் சேவை மூலம் பரீட்சைச் சுட்டெண்ணைத் தேடுதல்**<br>பா.த(சா.தர),க.பொ.த(உ.தர)ப் பரீட்சைகள் மட்டும். | ரூ.150.00 | 4,379 | 656,850.00 |
| **சாதாரண சேவையின் கீழ் உள்நாட்டு,வெளிநாட்டு தேவைகளுக்காக சான்றிதழ்களை வழங்குதல்**<br>I. க.பொ.த (சா.தரம்) மற்றும் க.பொ.த (உ.தரம்) | ரூ.350.00 | 5,665 | 1,982,750.00 |
| II. சாதாரண சேவை மூலம் மேலே குறிப்பிட்ட சான்றிதழ்களின் மேலதிக பிரதியை வழங்குதல். | ரூ.200.00 | 603 | 120,600.00 |

| | | | |
|---|---|---|---|
| ஒரு நாள் சேவை மூலம் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் தேவைகளுக்காகத் தபால் மூலம் அனுப்புதல்.<br>• மேலும் ஒருநாள் சேவை மூலம் சான்றிதழைப் பெறுவதற்காகவிண்ணப்பித்த பின்னர் விண்ணப்பதாரிகளினால் courier சேவையினால் அட்டையை சமர்ப்பித்த பின்னர் அந்த சேவையின் மூலம் சான்றிதழை ஒப்படைப்பதற்கு வசதிகள் ஏற்றபடுத்தப்பட்டுள்ளன. | ரூ.300.00 | 847 | 254,100.00 |
| **வெளிநாட்டு தேவைகளுக்காக வெளிவாரி பரீட்சார்த்திகளுக்கு மட்டும் பரீட்சைப் பெறுபேற்றின் இரண்டாம் பிரதி வழங்குதல்.**<br>க.பொ.த (சா.தரம்) மற்றும் க.பொ.த (உ.தர)ப் பரீட்சைகள் | | | |
| **இணையத்தின் மூலம் பரீட்சை சான்றிதழ்களுக்கு விண்ணப்பித்தல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேவைகளுக்காக** | | | |
| **சகல அரச அலுவலர்களினதும் பெறுபேறுகளை பரிசீலித்து உறுதிப்படுத்துதல்.**<br>சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள், பொதுநிர்வாகம், மாகாணசபை, மாகாண நிர்வாகத்தின் நிறுவனங்கள் பிரதேச செயலகங்கள், பொலிஸ், இராணுவம் போன்ற சகல அரச நிறுவனங்களும் | இலவசம் | 102,940 | |
| **பகுதி அரசாங்க நிறுவனங்களுக்காகப் பெறுபேறுகளை உறுதிப்படுத்தல்**<br>1. வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அதிகார சபைகள், விமான மற்றும் கடல்வழி, பகுதி அரச நிறுவனங்கள்.<br>2. காணாமற்போன உறுதிச் சான்றிதழ்களுக்குப் பதிலாக இரண்டாம் முறையாக உறுதிப்படுத்தும் கடிதங்களை வழங்க அபராதம் அறவிடல்<br>3. வெளிநாட்டுத்தூதரகங்கள் /தூதுவராலயங்கள் | ரூ.700.00<br><br>200.00 | 32,828 | 22,979,600.00 |
| ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி சான்றிதழ் வழங்கல் (சிங்களம், தமிழ்) | | 70 | |
| பட்டதாரிகள் அல்லாத ஆசிரிய மாணவர்களுக்காக இரண்டாம் பிரதியை வழங்கல் (சிங்களம், தமிழ்) | | | |
| ‘பிரின்செட்’ சான்றிதழ் வழங்கல் | | | |

| | | | |
|---|---|---|---|
| தொழில் நுட்பக் கல்லூரி சான்றிதழ் வழங்கல் | இலவசம் | | |
| தேசிய நடன, சங்கீத சான்றிதழ் வழங்கல் | | | |
| ஆரம்பப் பிரிவெனா சான்றிதழ் வழங்கல் | | | |
| பௌத்த அறநெறி ஆசிரியர் பரீட்சைச் சான்றிதழ் வழங்கல் | | 1,000 | |
| ஊடக மொழியினை உறுதி செய்யும் கடிதங்களை வழங்குதல் | | | |

மேற்படி சேவைகளுக்கு மேலதிகமாக சான்றிதழ் கிளை மூலம் நிறைவேற்ற எதிர்பார்க்கும் செயற்றிட்டங்கள்

1. பழைய பெறுபேற்று ஆவணங்களை (1990 இற்கு முந்திய) OCR முறையில் Scan செய்து அதனை இலத்திரனியல் - கோவைகளின் துணையுடன் சான்றிதழ்களைப் பதிப்பிப்பதற்காக தகவல்களைப் பெறக் கூடிய கணினி தரவுத் தொகுதியொன்றை (Retrivable Computer Data System) உருவாக்கும் செயற்றிட்டம்.
2. மேற்படி பணியின்போது Scan செய்வதற்காக ஏடுகளின் பக்கங்களை வேறாக்கி மீண்டும் அவற்றை முறையாக ஏடுகளாக கோவைப்படுத்தி, இற்றைப்படுத்தும் ஆவண அறையில் (புதிதாக அமைத்த இறாக்கைகளுடன் கூடிய) முறையாகப் பேணும் செயற்றிட்டம்.
3. சான்றிதழ்களினை பெற்றுக் கொள்ள ஒருநாள் சேவை தொடர்பாக அரசாங்க தகவல் மையத்தினூடாக (1919) அறிந்துகொள்ள முடியுமென்பதுடன் அத்தகைய சந்தர்ப்பங்களிலேயே சரியான தகவல்களை வழங்குவதற்கு முறையான வழிமுறைகளை தயாரிக்கும் செயற்றிட்டம்.
4. நிகழ்நிலை முறைமை (online) மூலம் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டம்
5. கிளையில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெறுபேறுகளை உறுதிபடுத்திப்படுத்துவதன் மூலம் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கான முறையான செயன்முறையை தயார் செய்வதற்கான செயற்றிட்டம்.

## 2.6 ஆய்வு, அபிவிருத்திக் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பாடசாலைப் பரீட்சைகள், அதனுடன் தொடர்புடைய சகல பரீட்சைகளினதும் தரத்தை மேம்படுத்துவதற்காக தேவையான தரவுகளைச் சேகரித்தல், வினாத்தாள் மற்றும் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்தல், வினாப்பத்திரங்கள் தயாரித்தல் மற்றும் விடைத்தாள்கள் மதிப்பிடும் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அது தொடர்பாக அறிவுறுத்தல் ஆகியன இக்கிளையின் முக்கிய பணிகளாகும். மேலும் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைவாக புதிய பாடங்களை அறிமுகஞ் செய்யும்போது பாடத்திட்ட மறுசீரமைப்பின் அடிப்படையில் அவற்றுக்குப் பொருத்தமாக வினாப்பத்திரங்களின்

கட்டமைப்பை தீர்மானித்தல், முன்னோடி வினாக்களைத் தயாரித்துப் பாடசாலைகளுக்கு அனுப்புதல் என்பன இக்கிளையின் பிரதான பொறுப்புக்களாகும்.

மேலும் வினாத்தாள்களைப் பகுப்பாய்வு செய்து பெறுகின்ற தகவல்களின் அடிப்படையில் பரீட்சார்த்திகள் குறைந்த அடைவு மட்டத்தைப் பெற்றுள்ள பாடத்துறைகளை இனங்கண்டு அது தொடர்பாக மாகாண, வலய, பாடப் பணிப்பாளர்கள் , ஆசிரியர்கள் உட்பட உரிய பணியில் ஈடுபடுபவர்களை அறிவுறுத்துவதன் மூலம் கல்வித் தர அபிவிருத்திக்காகப் பங்களிப்பை நல்குதல் ஆகியன இக்கிளையினால் ஆற்றப்படுகின்ற மேலும் சில முக்கிய பணிகளாகும்.

ஆய்வு மற்றும் அபிவிருத்தி கிளையினால் 2018ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பான விவரங்கள் பின்வருமாறு.

1. 2017ஆம் ஆண்டிலே அறிமுகம் செய்யப்பட்ட க.பொ.த.(உ.த) புதிய பாடத்திட்டத்திற்கேற்ப க.பொ.த.(உ.தர)ப் பரீட்சை - 2019 மற்றும் அதன் பின்னர் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்காக வினாத்தாள் கட்டமைப்பு மற்றும் மாதிரி வினாக்கள் உள்ளடக்கப்பட்ட புத்தகத்தை தயார் செய்து திணைக்கள இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் அச்சிடப்பட பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2. 2017ஆம் ஆண்டிலே ஆரம்பப் பிரிவெனா இறுதிப் பரீட்சைக்காக அறிமுகம் செய்யப்பட்ட தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட சிபார்சிற்கமைய அந்தப் பரீட்சைக்குரிய வினாத்தாளின் கட்டமைப்பு திருத்தப்பட்டது. அந்நத் திருத்தத்திற்கேற்ப பிரிவெனா இறுதிப் பரீட்சை - 2018இலும் அதன் பின்னரும் நடைபெறவுள்ள பரீட்சைகளுக்கான வினாத்தாள் கட்டமைப்பு மற்றும் மாதிரி வினாக்கள் உள்ளடக்கப்பட்ட புத்தகம் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தில் பதிவேற்றப்பட்டதுடன் அச்சிடப்பட்ட புத்தகங்களை பிரிவெனாக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

3. 12ஆம் தரத்திலே நடாத்தப்படும் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை இதுவரை எழுத்துப் பரீட்சையாக இடம்பெற்றதுடன் அதன் செய்முறைத் திறன்களை அளவிடக் கூடிய விதத்தில் 2018ஆம் ஆண்டிலிருந்து நிகழ்நிலை முறைமையிலான பரீட்சையாக **(Online Test)** நடாத்துவதற்குரிய தேவையான மென்பொருட்கள் அபிவிருத்தி செய்யப்பட்டதுடன் வினாப்பத்திரங்கள் இரண்டு **(Online)** தயாரிக்கப்பட்டு இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டதுடன் இறுதிப் பரீட்சைக்கு முன்னர் சாதாரண முறையில் முன்னோடி மாதிரி **(MOCK)** பரீட்சை ஏற்பாடு செய்யப்பட்டது. இத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சைக்குரிய **(Online)** வினாத்தாள் கட்டமைப்பு, மாதிரி வினாக்கள் அடங்கிய புத்தகம் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்ததுடன் அச்சிடப்பட்ட புத்தகங்களை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4. மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரித்தல்

4.1 க.பொ.த (உ/தர) 2016 பரீட்சையின் வினாத்தாள்களுக்கு விடை எழுதும் போது இனங்காணப்பட்ட பரீட்சார்த்திகளின் பின்னடைவு, பலமும்

பலவீனமும் பகுப்பாய்வு செய்யப்பட்டு க.பொ.த (உ/தர) 2016பரீட்சையின் மதிப்பீட்டு அறிக்கை பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

4.2 க.பொ.த (உ/தர) 2015 பொறியியற் தொழில்நுட்பவியல், உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டு பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் திணைக்கள இணையத்திலும் பதிவேற்றப்பட்டுள்ளன.

5. பகுப்பாய்வு நடவடிக்கைகளுக்காக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தேவையான முறையில் 2018 ஆண.டிற்கு 5ஆம் தர பரீட்சை, க.பொ.த (உ/தர)ப் பரீட்சை, க.பொ.த (சா/தர)ப் பரீட்சைக்கான RD படிவங்கள் தயாரிப்பதற்கும் அவற்றை மதிப்பீட்டு நிலையங்களுக்கு வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6. ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை - 2016இன் அடைவு மட்டம் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன் கல்வி அமைச்சின் ஆரம்பக் கல்விக்கிளையினால் நாட்டின் சகல ஆரம்பக்கல்விப் பணிப்பாளர்களுக்கும், ஆரம்பக்கல்வி மாகாணப் பணிப்பாளர்களுக்கும், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர்களுக்கும் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட செயலமர்வில் தகவல்களை சமர்ப்பித்தமை.

7. க.பொ.த (உ/தர) ஆங்கிலம் (79) பாட விடைத்தாளை மதிப்பிடுவதற்காக ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வை நடாத்துதல்.

8. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் மொழிப் பரீட்சையை தயாரிக்கும் வளவாளர்கள், மொழிசோதனை தொடர்பாக பொறுப்பு வாய்ந்த அலுவலர்களுக்காக இரண்டாம் மொழி, வெளியூர் மொழி சோதனையை தயாரிக்கும் செயலமர்வொன்று **Test Development Training Analysis Limited** நிறுவனத்தின் **Dr. Rita Green** அவர்களின் பங்கேற்புடன் **Waters Edge** நிறுவனத்தில் நடாத்தப்பட்டது.

9. உளச்சார்பு மற்றும் நுண்ணறிவு சோதனையில் உள்ளடக்கப்படும் உருப்படிகளின் தொகுதிக்கான வழிகாட்டல் கைந்நூலை தயாரிப்பதற்காக வதிவிட செயலமர்வொன்று பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள்/ கலாநிதிகள் / விரிவுரையாளர்கள் மற்றும் பொது நிர்வாக துறையில் ஒவ்வொரு பாடத்திலும் நிபுணத்துவம் வாய்ந்த வளவாளர்களை வாத்துவ டன்ஜரின் சுற்றுலா விடுதிக்கு அழைத்து பங்குபற்றச் செய்தமை.

10. நிறுவன பரீட்சைகளுக்கு திறந்த நூல் சோதனை முறையைப் பயன்படுத்தக் கூடிய விதம் தொடர்பாக ஆரம்பக் கட்ட கலந்துரையாடலுக்கான செயலமர்வை நடாத்தியமை.

## 11. மனிதவள அபிவிருத்தி

நிகழ்நிலை முறைமைப் பரீட்சையை நடாத்தியமை உள்ளிட்ட அளவீடும், மதிப்பீடும் தொடர்பாக மலேசியாவில் நடைபெற்ற பயிற்சிச் செயலமர்வில் திணைக்கள அலுவலர்களின் இரு குழுவினர் பங்குபற்றினர்.

**2019 ஆண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ள 6 செயலமர்வுகள்**

- வினாப்பத்திரங்களை தயாரித்தல், மதிப்பீடு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களை பரீட்சார்த்திகளின் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்காக பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக மாகாண மட்டத்தில் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்காக பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் வதிவிட செயலமர்வை ஊவா, சப்பிரகமுவ, தெற்கு, மேற்கு வடக்கு, கிழக்கு ஆகிய மாகாணங்களுக்கு ஒழுங்கமைத்து நடாத்துதல்.
- நிறுவனப் பரீட்சைகள், பாடசாலைப் பரீட்சைகளின் வினாப்பத்திரங்களின் பண்புத் தரத்தை அதிகரிப்பதற்காக உருப்படிகளை பயிற்றுவித்தல், உருப்படி குழுமமொன்றை நிறுவுதல்.
- தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா.தர)ப் பரீட்சை மற்றும் க.பொ.த.(சா.தர)ப் பரீட்சையின் பெறுபேறுகள்/ புள்ளிகள் தொடர்பான பகுப்பாய்வை மேற்கொள்ளல்.
- மதிப்பீடு, கணிப்பீடு தொடர்பாக வெளிநாட்டு பட்டப்பின் கற்கைநெறிக்கு இரு அலுவலர்களை பங்கு கொள்ளச் செய்தல்.
- தொழில்நுட்பவியல் பாடத்தின் செயன்முறை திறனை மதிப்பீடு செய்தல் தொடர்பான குறுகிய கால வெளிநாட்டு கற்கைநெறிக்கு அலுவலர்களை பங்குபறச் செய்தல்.
- வினாப்பத்திரம் தயாரித்தல், கணிப்பீடு தொடர்பான குறுகிய வெளிநாட்டு பயிற்சி நெறிக்கு அலுவலர்களை பங்குகொள்ளச் செய்தல்.
- மதிப்பீடு, கணிப்பீட்டுத் துறையில் பூகோள மயப்படுத்தல் மாற்றங்கள் தொடர்பாக அறிவைப் பெற்றுக் கொள்வது தேவையாதலால் அத்துறையில் சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள **International Association for Education Assesment (IAEA), International Language Testing Assosiation (ILTA), The Network on Education Quality Maintaining in Asia Pracific (NEQMAP)** ஆகிய நிறுவனங்களின் உறுப்பினர்களின் பங்களிப்புடன் அவற்றில் பல்வேறு செயலமர்வுகளை முன்னெடுத்தமை.
- அரச மற்றும் வேறு நிறுவனங்களின் பல்வேறு தொழிலுக்காக ஊழியர்களை சேர்த்துக் கொள்ளும் பரீட்சைகளின் ..திறனையும் செயற்றிறனையும் அதிகரித்துக் கொள்வதற்காக நுண்ணறிவு பரீட்சை, உளச்சார்பு மற்றும் கிரகித்தல் பரீட்சைகளுக்கான வினாக்களை உள்ளடக்கிய தொகுதியொன்றை (Item Pool) உருவாக்கல்.
- அரச பிரிவின் பல்வேறு பதவிகளின் அலுவலர்களுக்காக நடைபெறும் தடைதாண்டல் பரீட்சைகளுக்காக திறந்த நூல் சோதனை (Open Book Test) முறையை பயன்படுத்துவதற்கு வழிகாட்டல் கைநூலொன்றை தயாரித்தல்.

- அரச, வேறு நிறுவனங்களில் பல்வேறு தொழில்களுக்கான அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் பரீட்சைகளின் வினைத்திறனையும், விளைதிறனையும் அதிகரிப்பதற்காக நுண்ணறிவுப் பரிசோதனை, உளச்சார்பு சோதனை, கிரகித்தல் சோதனைகளுக்கான வினாக்குழுமம் ஒன்றை (Item Pool) அமைத்தல்.
- அரச அலகுகளின் பல்வேறு பதவிகளிலுள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைக்கு திறந்த நூல் பரீட்சை (Open Book Test) செயன்முறையை பயன்படுத்துவதற்கு வழிகாட்டல் கைந்நூலை தயாரித்தமை.
- பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை நிகழ்நிலை முறைமையில் (Online) நடாத்துதல்.

## 2.7 ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை

பாடசாலைப் பரீட்சைகள் தவிர்ந்த தேசிய ரீதியில் நடாத்தப்படுகின்ற ஆட்சேர்ப்பு பரீட்சைகள், வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைகள், பதவி உயர்வுப் பரீட்சைகள், வேறு பரீட்சைகள், சான்றிதழ் பரீட்சைகள், வெளிநாட்டு பரீட்சைகள் என்பனவற்றை ஒழுங்கமைத்து நடாத்தும் பணிகள் இக்கிளையினால் நிறைவேற்றப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் | - | அரச / பகுதி அரச / அரச வங்கிகள் போன்ற பல்வேறு நிறுவனங்களின் தேவைக்கேற்ப நடாத்தப்படுகின்ற சகல ஆட்சேர்ப்புப் பரீட்சைகளும் இதில் அடங்கும். |
| 2. வினைத்திறன் காண் தடை தாண்டற் பரீட்சை | - | அரச தொழிலில் ஈடுபடும் பல்வேறு மட்ட அலுவலர்கள், ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக பதவிகளுக்கு உரிய விடய அறிவை பரீட்சித்தல். |
| 3. பதவி உயர்வுப் பரீட்சைகள் | - | அரச / பகுதி அரச / அரச வங்கிகள் போன்ற சேவையிலுள்ள அலுவலர்களின் தகுதிகள் மற்றும் திறமைகளின் அடிப்படையில் உயர் பதவிகளுக்கு உயர்த்துவதற்காக நடாத்தப்படும் பரீட்சைகள் இதிலடங்கும். |
| 4. சான்றிதழ் பரீட்சை | - | அரச / பகுதி அரச/ அரச வங்கிகள் நிறுவனங்களினால் நடாத்தப்படும் பல்வேறு பாட நெறிகளுக்கு தெரிவு செய்தல, சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரம் வழங்குதல் என்பவற்றுக்காக நடாத்தப்படும் பரீட்சைகள் இதிலடங்கும். |
| 5. ஏனைய பரீட்சைகள் | - | பௌத்த / இந்து / இஸ்லாமிய / கத்தோலிக்க ஆகிய சமயங்கள் தொடர்பாக நடாத்தப்படுகின்ற பரீட்சைகள், தேசிய நடன,/ சங்கீத பரீட்சைகள், மேற்கத்திய சங்கீதப் பரீட்சைகள் போன்ற சான்றிதழ் வழங்கும் பரீட்சைகள் இதிலடங்கும். |

| | | |
|---|---|---|
| 6. வெளிநாட்டுப் பரீட்சைகள் | - | வெளியூர் பல்கலைக் கழக மற்றும் ஏனைய கல்வி சார் நிறுவனங்களுக்கு உரிய இந்நாட்டு பரீட்சார்த்திகளுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட பரீட்சை |

மேற்படி பரீட்சைகளை ஒழுங்கமைக்கும்போது ஒவ்வொரு வருட இறுதியிலும் எதிர்வரும் வருடங்களுக்காக உத்தேசித்த பரீட்சைகள் தொடர்பான தகவல்கள் அந்தந்த நிறுவனங்களில் இருந்து பெறப்பட்டு அதற்கேற்ப வருடாந்த வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படும்.

பல்வேறு நிறுவனங்களுக்கு உரிய வருடாந்த வேலைத்திட்டங்களை உள்ளடக்கி பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பங்களை கோருதல் வர்த்தமானி அறிவித்தல் மூலமோ அல்லது உள்ளக சுற்றுநிருபங்களுக்கு மதிப்பீடு வழங்கி அவதானத்தைப் பெற்று அதற்கேற்ப திருத்தம் செய்யப்பட்ட அறிவித்தல்களை வெளியிடுதல் இந்தக் கிளையின் பிரதான பணியாகும்.

அந்தந்த பரீட்சைகளுக்காக பரீட்சை நிலையங்களை ஒதுக்குதல், அனுமதிஅட்டைகளை விநியோகித்தல் தொடர்புபடுத்தல், பரீட்சை கடமைகளுக்கு அலுவலர்களை நியமித்தல், இணைப்பாக்கம் செய்தல், வினாப்பத்திரங்கள் அச்சிடவும் பொதியிடவும் தேவையான எண்களை அறிக்கையிடல், பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பங்களில் எழுகின்ற பிரச்சினைகளை தீர்த்தல் போன்ற பணிகளுக்கு மேலதிகமாக அனுமதி அட்டை தொடர்பாக எழும் பிர்சினைகளைத் தீர்த்தல், சில பரீட்சைகளுக்குரிய தேவைக்கேற்றவாறு பரீட்சை மேற்பார்வையாளர்கள் இணைப்பாளர்களுக்கான அறிவுறுத்தல் கருத்தரங்குகளை நடாத்துதல் போன்றவை இக்கிளையினால் மேற்கொள்ளப்படும் பணிகளாகும்.

**2018ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட பணிகள்**

| நடாத்தப்பட்ட பரீட்சை வகை | பரீட்சைகளின் எண்ணிக்கை | பரீட்சார்த்திகளின் எண்ணிக்சை | வருமானம் ரூபா | பரீட்சை நிர்வாக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் | 56 | 189,216 | 82,682,928.80 | 25,207 |
| சான்றிதழ் பரீட்சைகள் | 23 | 170,453 | 11,656,512.50 | 15,613 |
| வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைகள் | 44 | 61,305 | 20,394,558.20 | 6,214 |
| பதவி உயர்வுப் பரீட்சைகள் | 14 | 11,905 | 4, 207,420.75 | 1,118 |
| வெளிநாட்டுப் பரீட்சைகள் | 13 | 4,100 | 391,902.50 | 299 |
| வேறு | 04 | 8,934 | 4,900,903.50 | 571 |

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்தம் | 154 | 445,913 | 124,234,226.25 | 49,022 |

## 2.8 இரகசியக் (நிறுவனம்சார் பரீட்சைகள்) கிளை

ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையினால் ஒழுங்கு செய்யப்படுகின்ற பரீட்சைகளுக்காக சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சியுடைய நிபுணர்களை பரீட்சகர்களாக நியமிப்பதன் மூலம் தரமான மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்தல் இக்கிளையின் பிரதான பணியாகும். அதற்கு மேலதிகமாக வினாப்பத்திரங்களை அச்சிடல், பரீட்சை நிலையங்களின் அடிப்படையில் பொதி செய்தல், இணைப்பு நிலையங்களுக்கு அல்லது பரீட்சை நிலையங்களுக்கு விநியோகித்தல் ஆகிய செயன்முறைகளும் இக்கிளையினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகளாகும்.

இக்கிளையினால் எதிர்காலத்தில் நிறைவேற்ற எதிர்பார்க்கும் செயற்றிட்டங்கள்

- அரச சேவையிலுள்ள அலுவலர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைக்கான சில பாடங்களுக்கு திறந்த நூல் பரீட்சைகளை நடாத்துதல்
- அரச சேவையிலுள்ள அலுவலர்களின் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சைகளில் அவர்களின் செயலடைவுக் கோவைகளுக்கு (Portfolio) குறித்தளவு புள்ளிகளை வழங்குவது தொடர்பாக பரிசீலித்தல்.
- நிறுவனம்சார் பரீட்சைகளுக்காக நிகழ்நிலை (Online) முறைமையை பரீட்சித்துப் பார்த்தல்.
- உளச்சார்பு வினாக்களுக்காக உருப்படிகளின் குழுமம் ஒன்றை (Item pool) உருவாக்குதல்.

**2018ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட பணிகள்**

| நடாத்தப்பட்ட பரீட்சை வகை | நடைபெறும் பரீட்சைகளின் எண்ணிக்கை | விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை | அச்சிடப்பட்ட வினாப்பத்திரங்கள் (மொழி மூலங்களுக்கேற்ப) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் |
| ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் | 56 | 201,682 | 134 | 123 | 102 | 359 | 414,781 | 92,731 | 48,513 | 556,025 |
| சான்றிதழ் பரீட்சைகள் | 19 | 141,776 | 222 | 39 | 88 | 349 | 227,264 | 44,775 | 21,294 | 293,333 |
| வினைத்திறன் காண் தடைதாண்டற் பரீட்சைகள் | 48 | 51,285 | 122 | 93 | 75 | 290 | 92,835 | 23,475 | 4,025 | 120,335 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதவி உயர்வுப் பரீட்சைகள் | 9 | 14,192 | 22 | 19 | 6 | 47 | 353,065 | 7,665 | 2,520 | 363,250 |
| வெளிநாட்டுப் பரீட்சைகள் | 10 | 2,297 | 8 | 8 | 30 | 46 | 1,646 | 386 | 7,506 | 9,538 |
| மொத்தம் | 142 | 411,232 | 508 | 282 | 301 | 1,091 | 1,089,591 | 169,032 | 83,858 | 1,342,481 |

## 2.9 மதிப்பீட்டுக் (நிறுவனம்சார் பரீட்சைகள்) கிளை

திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற சகல நிறுவனம் சார் பரீட்சைகளும் அதாவது அரச, பகுதி அரச, நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல், பதவி உயர்த்துதல், வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைகள் யாவற்றினதும் விடைத்தாள்களை மதிப்பிடும் நடவடிக்கைகள் இக்கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன. வெவ்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களிலிருந்து விடைத்தாள் பரீட்சகர்களைத் தேர்ந்தெடுத்தல், கட்டுப்பாட்டு விடைத்தாள்களைப் புள்ளியிடுதல், மதிப்பீடு தொடர்பாக பரீட்சகர்களை அறிவூட்டுதல், மாநாடு முறையில் விடைத்தாள்களை மதிப்பிடுதல், இறுதியில் புள்ளிப் பட்டியலைப் பெறுபேறுகள் கிளைக்குக் கையளித்தல் வரையான செயற்பாடுகள் இக்கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

**2018ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட பணிகள்**

| பரீட்சை வகை | விடைத்தாள்களின் எண்ணிக்கை | மதிப்பீட்டில் ஈடுபட்ட பரீட்சகர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் | 211,686 | 2,255 |
| பதவி உயர்வுப் பரீட்சைகள் | 21,827 | 124 |
| வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைகள் | 51,173 | 539 |
| சான்றிதழ் பரீட்சைகள் | 305,952 | 2,356 |
| ஏனையவை | 11,686 | 151 |
| மொத்தம் | 602,324 | 5,425 |

## 2.10 பெறுபேறுகள் (நிறுவனம்சார் பரீட்சைகள்) கிளை

மதிப்பீட்டுக் (நிறுவனம்சார் பரீட்சைகள்) கிளையுடன் நெருங்கிய தொடர்பைப் பேணுகின்ற பெறுபேற்றுக் கிளை மூலம் வருடாந்தம் நடைபெறுகின்ற சகல நிறுவனப் பரீட்சைகளினதும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. அதே வேளை, வர்த்தமானி அறிவித்தல்/ சுற்று நிருபங்கள் ஆகியவற்றின்படி, திணைக்களத்தின் முறையியல்களைப் பயன்படுத்தி வரவு இடாப்பைப் பரிசீலித்தல், அனுமதி அட்டைகளைப் பரிசீலித்தல், புள்ளிகளின் குறைபாட்டைப் பரிசீலித்தல், பரீட்சை நிலையங்களின் மாற்றம், பாடமாற்றங்களை சரிபார்த்தல் ஆகிய செயற்பாடுகளின் பின்னர் முறையற்ற புள்ளிகளின் அறிக்கைகளைத் தயாரித்தல், விண்ணப்பப்படிவங்களைத் தெரிதல், விண்ணப்பப்படிவங்களுடன் பெறுபேற்று ஆவணங்களை சரிபார்த்தல் ஆகிய செயற்பாடுகளின் பின்னர் தெளிவானதும் சரியானதுமான பெறுபேற்று ஆவணங்களைத் தயாரித்து உரிய அமைச்சிற்கு, திணைக்களத்திற்கு, அரச வங்கிக்கு, பகுதி அரச நிறுவனத்திற்கு, சகல அறநெறிப் பாடசாலைகளுக்கு, பிரிவேனாக்ளுக்கு சகல விண்ணப்பதாரிகளுக்கு பெபேறுகளை வழங்குதல் என்பன இக்கிளையின் பணிகளாகும்.

2018ஆம் ஆண்டிலே நிறைவேற்றப்பட்ட பணிகள்

| பரீட்சை வகை | பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பரீட்சைகளின் எண்ணிக்கை | பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் | 51 | 137,490 |
| பதவி உயர்வுப் பரீட்சைகள் | 11 | 3,069 |
| சான்றிதழ் பரீட்சைகள் | 21 | 168,829 |
| வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சைகள் | 38 | 22,794 |
| ஏனைய பரீட்சைகள் | 05 | 7,937 |
| மொத்தம் | 126 | 340,119 |

மேலே தரப்பட்டுள்ள அட்டவணையில், 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு 2018ஆம் ஆண்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பரீட்சைகளினதும் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு அந்த வருடத்திலேயே பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பரீட்சைகளின் மொத்த எண்ணிக்கையும் காட்டப்பட்டுள்ளன.

## 2.11 நிர்வாகக் கிளை

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் சகல நிர்வாக செயற்பாடுகளும் நடைபெறுவது நிர்வாகக் கிளையின் மூலமாகும். நிர்வாக நடவடிக்கைகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள், அதே சமயம் உத்தியோகத்தர்களையும் பணிக்குழுவினரையும் ஆட்சேர்த்தல், சேவையில் ஈடுபடுத்தல், வருடாந்த இடமாற்றம், பணிக்குழுவினர் ஓய்வு பெறல் ஆகியன தொடர்பான பணிகளுடன், தனிப்பட்ட கோவையைப் பேணுதல், திணைக்களப் பணிப்பாளர் சகலரினதும் நலன்புரி சேவைகள் என்பனவற்றையும் கல்வி அமைச்சு, பொது நிர்வாக, முகாமைத்துவ அமைச்சு, ஓய்வூதிய திணைக்களம், அக்ரகார திணைக்களம் ஆகிய அரச, பகுதி அரச நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி செய்கின்றது.

தபாற் கிளை, போக்குவரத்துக்கிளை நிழற்பிரதி எடுக்கும் கிளை, கட்டிடக் கிளை, சுத்தப்படுத்தற் கிளை, பாதுகாப்புக் செயற்பாடுகள், விசாரணைகள் பிரிவு, மின்சாரப் பிரிவு, பராமரிப்புப் பிரிவு, தொலைபேசி பரிமாற்ற அலகு ஆகியன நிர்வாகக் கிளையின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் பிரிவுகளாகும். மேற்படி சகல பிரிவுகளும் முறையாகச் செயற்படுகின்றமை, திணைக்களத்தின் சகல பணிகள் மீதும் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும். இக்கிளை ஏனைய சகல கிளைகளுடனும் தொடர்புற்று தொடர்ச்சியாகத் தொடர்பைப் பேணியபடி சரியாகவும் முறைசார்ந்தும் வினைத்திறன்மிக்கதாகவும் செயற்படுவதற்காக நிர்வாகக் கிளைக்குப் பாரிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன

## 2.12 தபாற் கிளை

திணைக்களத்திற்குக் கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்கள், நபர்கள் ஆகியோருக்கு அனுப்பப்படுகின்ற சகல கடிதங்கள் தொடர்பான சகல செயற்பாடுகளும் இங்கு ஆற்றப்படுகின்றன. தினமும் இக்கிளைக்குக் கிடைக்கின்ற ஆயிரக்கணக்கான கடிதங்களை உரிய கிளைகளுக்கும், பரீட்சைகளுக்கும் ஏற்ப தரம் பிரித்து, பின்னர் அவை திறக்கப்பட்டு பதிவிலக்கம் குறிப்பிடப்பட்டு கோவைப்படுத்தப்பட்டு உரிய கிளைக்கு வழங்கப்படும். பாடசாலைகள் மற்றும் ஏனைய பரீட்சை விண்ணப்பப்படிவங்களை ஆயிரக்கணக்கில் பரீட்சிக்கும் போது சரியாகவும் ஒழுங்காகவும் வினைத்திறன் மிக்கதாகவும் இப்பணி ஆற்றப்பட வேண்டும்.

| பணி | கடிதங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை |
|---|---|---|
| கிடைத்த சாதாரண கடிதங்களின் எண்ணிக்கை | 137,201 | |
| பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை | 511,821 | |
| இக்கிளையிலிருந்துஅஞ்சல் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை | 717,581 | |

| | | |
|---|---|---|
| சாதாரண கடிதங்களைத் தபாலில் இடுவதற்கான செலவு | | ரூ9,791,120.00 |
| தபால் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ள பதிவுத் தபால்கள் | | |
| தபால் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்ட பதிவுத் தபால்களின் எண்ணிக்கை | 21,189 | |
| பதிவுத் தபால்களுக்கான செலவு | | ரூ. 1,379,745.00 |

## 2.13 கணக்குக் கிளை

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற சகல பரீட்சைகளினதும் நிர்வாக மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள் உட்பட திணைக்களத்தின் சகல வரவு செலவுத் திட்ட கொடுப்பனவு நடவடிக்கைகளை வருடாந்த வருமானத்தைக் கணக்கில் பதிவு செய்து அறிக்கை செய்தல் கணக்குக் கிளையின் மூலம் நடைபெறுகின்றது.

வருடாந்தம் 3500 மில்லியன் ரூபாவை விடக் கூடிய வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு ஒதுக்கீடுகளின் நிதி முகாமைத்துவம் மற்றும் அறிக்கை செய்தல் நடைபெறும் அதேசமயம் வருடாந்தம் 260,000 கொடுப்பனவுப் பத்திரங்களுக்கு கொடுப்பனவுகளும் செய்யப்படுகின்றது. மிகச் சரியான கணக்கீடுகளின் அடிப்படையில் பரீட்சை தொடர்பான கடமைகள் முடிவடைந்ததும் உடனடியாக உரிய கொடுப்பனவுகளை செய்து முடிப்பது கணக்குக் கிளையின் பொறுப்பாகும்.

| செலவுத் தலைப்பு | வருடாந்த ஒதுக்கீடு (ரூபாய்) | 2018 டிசம்பர் 31 திகதியாகும் போதான செலவு (ரூபாய்) |
|---|---|---|
| தனிப்பட்ட சம்பளங்கள் வேதனங்கள் | 328,500,000.00 | 321,671,956.00 |
| வேறு மீளெழும் செலவுகள் | 2,884,300,000.00 | 2,839,333.284.00 |
| மேலதிக ஒதுக்கீடு | - | - |
| மொத்த மீளெழும் செலவு | 3,212,800,000.00 | 3,161,005,240.00 |
| மூலதனச் செலவுகள் | | |
| கட்டிடங்களும் நிர்மாணங்களும் | 59,000,000.00 | 5,781,159.00 |
| இயந்திரங்கள், கருவிகள் | 6,000,000.00 | 2,952,401.00 |
| வாகனங்கள் | 6,000,000.00 | 2,064,659.00 |
| மொத்தம் | 71,000,000.00 | 10,798,219.00 |
| மூலதனச் சொத்துக்களை உரித்தாக்குதல் | | |
| தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் | 4,000,000.00 | 3,927,531.00 |

| | | |
|---|---|---|
| மொத்தம் | 4,000,000.00 | 3,927,531.00 |
| மனித வள அபிவிருத்தி | | |
| பணிக்குழுவினரைப் பயிற்றுவித்தல் | 3,000,000.00 | 1,480,140,00 |
| மொத்தம் | 3,000,000.00 | 1,480,140,00 |
| இயந்திரங்கள், கருவிகள் | 530,000,000.00 | 529,038,315.00 |
| கட்டிடங்களும் நிருமாணங்களும் | 136,000,000.00 | 60,991,006.00 |
| மொத்தம் | 666,000,000.000 | 590,029,321.00 |
| முதலீடு | | |
| TSEP மொத்தம் | 75,000,000.00 | 56,550,139.00 |
| மொத்த முதலீடு மொத்த கூட்டுத்தாபனம் | 819,000,000,00 | 662,785,350.00 |
| முழு மொத்தம் | 4,031,800,000.00 | 3,823,790,590.00 |

| வருடாந்த வருமானம் | மதிப்பீடு | உண்மையான வருமானம் |
|---|---|---|
| பரீட்சை கட்டணங்கள் வேறு அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு எல்லை (ரூ) 2018.12.31இற்கு மீதி | திருத்தம் 300,000,000.00 | 287,193,870.53 |
| அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு | Limit(Rs.) | Actual Rs. as on 2018.12.31 |
| ஆகக் கூடிய வரவு எல்லை | 35,000,000.00 | 33,972,605.00 |
| ஆகக் குறைந்த செலவு எல்லை | 2,000,000.00 | 21,411,507.38 |
| ஆகக் கூடிய வரவு மீதி எல்லை | 100,000,000.00 | 89,200,641.29 |

## 2.14 வழங்கற் கிளை

சகல பரீட்சைகளுக்குத் தேவையான அழிவடையும் பொருட்களை கொள்வனவு செய்தல், விநியோகித்தல், மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்தல், பராமரித்தல் என்பன இக்கிளையின் பணிகளாகும்.

முக்கியமாக 2018ஆம் ஆண்டில் நடத்திய க.பொ.த (சா.தரம்), க.பொ.த.(உ.தரம்) ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை ஆகியன உட்பட வேறு நிறுவனப் பரீட்சைகள், ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் பலவற்றுக்கும் எவ்வித தாமதமுமின்றி சகல காகிதாதிகளும் விநியோகிக்கப்பட்டது. இதன் கீழ் மேற்படி

பரீட்சைகளுக்குத் தேவையான விடைத்தாள் புத்தகங்கள், தாள்கள், கடித உறைகள், நூல், பசை ஆகிய சகல காகிதாதிகளையும் வழங்குவதற்காகப் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிலிருந்து விலை மனு கோரப்பட்டுத் தொழினுட்ப மதிப்பீட்டுக்குழுவின் சிபாரிசுடன் கொள்வனவுகள் இடம்பெற்றது.

கடந்த காலங்களில் கழித்தொதுக்கப்பட்ட விடைப்பத்திரங்கள், வினாப்பத்திரங்கள் ஏனைய அகற்ற வேண்டிய இரகசிய கடதாசிகள் வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபனத்திற்கு மீள சுழற்சிக்காக கையளிக்கப் பட்டது.

வருடாந்த பொருள் கணக்காய்வுக் குழுக்கள் மூலம் கழித்தொதுவதற்காகக் கழித்தொதுக்கும் சபையின் அங்கீகாரத்துடன் களஞ்சியத்திற்குக் கையளிக்கப்பட்ட பொருட்கள் திறந்த ஏல விற்பனை மூலம் அதிக விலை முன்வைத்த வாங்குநருக்கு விற்று உரிய பெறுமதியை அரச வருமானக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. திணைக்களத்திற்குச் சொந்தமான ஒவ்வொரு கிளையிலும் உள்ள நிழற் பிரதியெடுக்கும் இயந்திரங்கள், கணினி இயந்திரங்கள், பிரதியெடுக்கும் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், அச்சகத்திலுள்ள அச்சியந்திரம் ஆகிய சகல இயந்திரங்களையும் திருத்த மற்றும் பராமரிக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. வினாப்பத்திரங்களின் இரகசியத்தன்மையை உச்சளவு பேணும் வினைத்திறன்மிக்க அச்சு இயந்திரம் இரகசியக்கிளைக்கு வழங்கப்பட்டது. Turn Key Web அச்சு இயந்திரத்தியல் மூலம் வினைத்திறனாக பரீட்சை வினாப்பத்திரங்கள் அச்சிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு திணைக்களத்தின் மொத்த மின்கட்டணத்தை இழிவளவாக்கும் வகையில் சூரியசக்தி தொகுதியை ஸ்தாபித்து சூரிய விளக்கு தூண்களை நிறுவி பயன்பெறும் அதேவேளை அதன் மூலம் வருடாந்தம் மணிக்கு 337000 கிலோவொட்ஸ் கொள்ளளவை உற்பத்தி செய்தல், 335,000.00 ரூபா வரையிலான தேறிய இலாபத்தைப் பெற்றுக் கொள்ளல்.

பொதியிடல் நடவடிக்கைகளை மிகவும் இலகுவாக ஒரே இடத்தில் மேற்கொள்வதற்கு தேவையானவாறு தற்போதுள்ள பொதி செய்யும் அறையை விஸ்தரித்தல், திணைக்களத்தின் கடமைகளை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு புதிய கணினிகள் மற்றும் உரிய தொழில்நுட்ப கருவிகளை பெற்றுக்கொடுத்தல்.

2018ஆம் ஆண்டிலிருந்து பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சையை நிகழ்நிலை முறைமையில் (Online) நடாத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் திணைக்களத்திற்குத் தேவையான ஆக்கப்பூர்வ இணையத்தளத்தை இலவசமாக உருவாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

பரீட்சைகளை நிர்வகிப்பதற்கு நாடு பூராகவும் நிறுவப்பட்டுள்ள பிராந்திய சேகரிப்பு நிலையங்கள், இணைப்பு நிலையங்களிலுள்ள இரகசிய ஆவணங்களின் பாதுகாப்பை மிகவும் உறுதிப்படுத்திக் கொள்வதற்காகஇரு பூட்டுகளைக் கொண்ட உருக்கு அலுமாரிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை.

திணைக்களக் கட்டடத்தை திருத்தும் மற்றும் பராமரிக்கும் வேலைகள், திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் நலனைக் கருத்திற் கொண்டு சிற்றுண்டிச் சாலை, பாதுகாப்பிற்கான பாதுகாப்புப் பிரிவு, சுத்தப்படுத்துவதற்கான சுத்திகரிப்புச் சேவை ஆகியவற்றைச் செயற்படுத்த உரிய கொள்வனவு நடவடிக்கைகள், ஏனைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 2.15. அச்சகம்

### 2.15.1 அச்சகம் (இரகசிய)

திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற சகல பரீட்சைகளுக்குமான வினாப்பத்திரங்களை அச்சிடுவது இவ்வச்சகத்திலாகும். மிகவும் அந்தரங்கமான முறையில் நடைபெறும் இச்செயற்பாடுகள் யாவும் சரியான தினத்தில், பரீட்சார்த்திகளின் எண்ணிக்கைக்கேற்ப தயாரித்தல் வேண்டும். எந்த ஒரு அச்சுத் தவறும் ஏற்படாத வகையில் நடைபெற வேண்டிய மிகவும் சிக்கலான செயன்முறை இதுவாகும். க.பொ.த (சா.தரம்) மற்றும் க.பொ.த.(உ.தர)ப் பரீட்சைகளுக்காக இலட்சக் கணக்கான பாடசாலை, தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றும் அதே சமயம் அந்தந்தப் பரீட்சைகளின் பாடங்கள் பலவற்றுக்காக வினாப்பத்திரங்கள் மும்மொழிகளிலும் அச்சிடப்படுகின்றன. இரவு பகலாக இங்கு பணியாற்றும் அலுவலர்களும் ஊழியர்களும் மிகவும் கடினமான ஒரு பணியில் ஈடுபடுகின்றனர்.

அக் கிளையினால் 2018ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்ட வினாப்பத்திரங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு

| பதிப்பிக்கப்பட்ட இரகசிய ஆவணம் | எண்ணிக்கை |
|---|---|
| 2018 க.பொ.த உயர்தரப்பரீட்சைக்காக மும் மொழிகளிலும் அச்சிடப்பட்ட வினாப்பத்திரங்கள் | 4,114,030 |
| 2018 க.பொ.த உயர்தரப்பரீட்சைக்காக மும் மொழிகளிலும் புத்தகங்களாக அச்சிடப்பட்ட வினாப்பத்திரங்கள் | 2,586,560 |
| 2018 க.பொ.த (உ.தரம்) புவியியல் பாடத்திற்காக தனித்தனியாக அச்சிடப்பட்ட நிற தேசப்படங்கள் | 64,250 |
| 2018 க.பொ.த (உயர்.தரம்) பரீட்சைகள் மூன்று மொழிகளிலும் நிறப் படங்களுடன் கூடிய வினாப்பத்திரங்கள் | 16,000 |
| 2018 ஆம் ஆண்டில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்காக இரண்டு மொழிகளிலும் அச்சிடப்பட்ட வினாப்பத்திரங்கள் | 748,700 |
| 2018 க.பொ.த(சா.தரப்) பரீட்சைக்காக மும் மொழிகளிலும் புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்திற்காக அச்சிடப்பட்ட வினாப்பத்திரங்கள் | 7,898,175 |
| 2018 க.பொ.த (சா.தரப்) பரீட்சைக்காக மூன்று மொழிகளிலும் புத்தகங்களாக அச்சிடப்பட்ட வினாத்தாள்கள் | 2,004,750 |
| 2018 க.பொ.த (சா.தர) மூன்று மொழிகளுக்குரிய நிறச் சித்திரங்களுடன் கூடிய வினாப்பத்திரங்கள் | 142,500 |
| 2018 க.பொ.த (சா.தரப்) பரீட்சைக்காக புவியியல் பாடத்திற்காக மூன்று மொழிகளிலும் பதிப்பித்த நிற தேசப்படங்கள். | 118,500 |

| | |
|---|---|
| 2018 இல் வேறு பரீட்சைகளுக்காக அச்சிடப்பட்ட வினாத்தாள்கள் மும்மொழிகளிலும் | 735,950 |
| மொத்தம் | 18,429,415 |

## 2.15.2 அச்சகம் (இரகசியமல்லாத)

இத் திணைக்களத்தின் இரகசியமல்லாத அச்சகத்தின் மூலம் நடைபெறுகின்ற பணிகள் பலவாகும். முக்கியமாக பரீட்சைகளுக்குத் தேவையான அறிவுறுத்தற் படிவங்கள், பல்வேறு பரீட்சைகளுக்கான சான்றிதழ்கள், பலவிதமான சிட்டைகள் மற்றும் பலவகையான படிவங்கள், ஆகியன இங்கு பதிப்பிக்கப்படுகின்றன.

| தொடர் எண் | 2018 ஆம் வருடத்தில் அச்சிட்ட ஏனைய காகிதாதிகள் (இரகசியம் அல்லாத) | எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பரீட்சைகளுக்கான நாட்குறிப்பேடு மற்றும் அறிவுறுத்தற் கையேடு | 84,750 |
| 02 | பல்வேறு பரீட்சைகளுக்கான சான்றிதழ்கள் | 124,652 |
| 03 | சான்றிதழ் கிளைக்காக பதிப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் | 335,000 |
| 04 | பல்வேறு சிட்டைகள் | 3,869,900 |
| 05 | பல்வேறு படிவங்கள் | 4,468,710 |
| 06 | பல்வேறு கடிதத் தலைப்புக்கள் | 16,300 |
| 07 | கோவை உறை அச்சிடல் | 838,300 |
| 09 | பெறுபேற்று அட்டவணை / பெறுபேற்று குறிப்பைப் பதிப்பித்தல் | 223,440 |
| 10 | கிளைகளுக்கான புத்தகங்களைக் கட்டுதல் | 5,827 |
| 11 | வேறு பல வகையான அச்சிடல் | 1,421,048 |
| 12 | முழு மொத்தம் | 11,387,927 |

## 2.16 கணினிக் கிளை

பாடசாலைப் பரீட்சைகள், ஆசிரியர் கலாசாலைப் பரீட்சைகள், அறநெறிப் பாடசாலைப் பரீட்சைகள், பிரிவேனாப் பரீட்சை, நிறுவனம்சார் பரீட்சைகள்( தரவு கணினிமயப்படுத்தப்பட்டு நடத்தப்படுகின்ற நிறுவனப் பரீட்சைகள்) தொடர்பாக கணிணிமயப்படுத்தும் நடவடிக்கைகள் இக்கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

அதே போன்று பரீட்சைகளை நடத்துவதற்கான விண்ணப்பப்படிவங்களின் வர்த்தமானி அறிவித்தல்களுக்கான மேற்பார்வை, ஒவ்வொரு பரீட்சைக்குமுரிய விசேட இயல்புகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தல், கணனி வேலைத்திட்டங்களைத் தயாரித்தலும் செயற்படுத்தலும், தரவு நிரற்படுத்தும் ஆவணங்கள், அனுமதி அட்டைகள் உட்பட பெறுபேறுகளை வெளியிடுவதற்குத் தேவையான ஆவணங்களை அச்சிட்டு உரிய கிளைகளுக்கு வழங்கல் என்பனவும் இக்கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பெறுபேறுகளைத் தயாரிப்பதற்குரிய கணினி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைத்தல், பாடசாலை மதிப்பீட்டுக்குத் தேவையான கணினி ஆவணங்களையும் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு முன்னேற்பாடுகளைச் செய்யத் தேவையான பல்றே ஆவணங்களை உரிய கிளைகளுக்கு வழங்கல்,பெறுபேறுகளைத் தயாரித்தலும் மேற்பார்வைக் குழுவுடன் தொடர்பு கொள்ளல் ஆகியனவும் இக்கிளையின் பணிகளாக இனங்காணப்படுகின்றன.பெறுபேறுகளை வழங்குவதற்கு முன்னர் நிறுவனம்சார் பரீட்சைகளின் தேவைகளின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சை ஆவணம் , முன்னுரிமை ஆவணங்கள், குறைபாட்டு ஆவணங்கள், இறுதிப்பெறுபேறுகள் ஆகியவற்றைத் தயாரித்து பெறுபேற்றுக் கிளைக்கு வழங்கல்,பாடசாலைப் பரீட்சைகளுக்கான பெறுபேறுகளை பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு வழங்கல் ஆகியன பிரதானமான நடவடிக்கைகளாகும்.

சான்றிதழ் வழங்கும் பரீட்சைகளுக்குரிய நடவடிக்கைகளில் க.பொ.த (சா.தர), க.பொ.த (உ.தர), அறநெறிப் பாடசாலை ,பிரிவேனா, அறநெறி ஆசிரியர், ஆசிரியர் கலாசாலை போன்ற பரீட்சைகளுக்காக விண்ணப்பதாரிகளுக்கு தனிப்பட்ட சான்றிதழ்கள் வழங்குதல், நிறுவனம்சார் பரீட்சைகளுக்கான தனிப்பட்ட பெறுபேற்று ஆவணங்களை அச்சிட்டு உரிய கிளைக்கு வழங்குதல் என்பன சான்றிதழ்படுத்தம் செயன்முறைக்கு வழங்கப்படும் விசேட பங்களிப்பாகும்.

வெவ்வேறு தேவைகளுக்காகப் தரவுக் கோவைகளை வழங்கல் இக் கிளையினால் ஆற்றப்படுகின்ற பணியாகும். பாடசாலைகள், வலயம், மாகாணம், தேசிய மட்டம் என்றவாறு அடைவு மட்டம் பற்றிய கோவை மற்றும் அறிக்கைகளைப் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கும் ஆய்வு, அபிவிருத்திக் கிளைக்கும் தேவைக்கேற்றவாறு வழங்குதல், கல்வி அமைச்சுக்குரிய உரிய அறிக்கையை வழங்குதல் என்பவற்றுடன் அரச , அரச சார்பற்ற நிறுவனங்களின் பயனுறுதியுள்ள பணிகளுக்காகச் செய்யப்படுகின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் பரீட்சைகளுக்கான திறமைகளுக்குரிய, தகவல்கள் மற்றும் பகுப்பாய்வு அறிக்கையை வழங்கலும் நடைபெறுகின்றது.

இங்கு செய்யப்படுகின்ற ஏனைய சிறப்பு பணிகளில் தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தலும் இணைத்தலுமாகும். இக் கிளையினால் செய்யப்படுகின்ற மேலும் சில பிரதான பணிகள்

1. தரவுநிரற்படுத்தல் மற்றும் சான்றிதழ் கிளைகளின் தேவைகளுக்கேற்ப தொகுதி இணைப்பை வழங்குவதல்
2. AS400 முறைமை இணைப்பையும் IBM நிறுவனத்தின் மூலம் வழங்கப்படுகின்ற சேவைகளையும் பராமரிப்பு செயற்பாடுகளையும் தொடர்புபடுத்தல்
3. AS400 முறைமைகள் மற்றும் நிறுவப்பட்டுள்ள பிரதான அச்சு இயந்திரம் தொடர்பாக உரிய சேவை வழங்கல் நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் சேவைகள், பராமரிப்பு நடாத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்புபடுத்தல்.
4. தரவு நிரற்படுத்தும் கிளையுடன் தொடர்பைப் பேணியபடி பல்வேறு பரீட்சைகளினதும் கணினி நிகழ்ச்சித்திட்டங்களை அபிவிருத்தி செய்து வழங்கல்.
5. திணைக்கள இணையத்தளத்தை நிகழ்காலத்துக்கு ஏற்றவாறு இற்றைப்படுத்தல்.
6. தரவுகளை பாதுகாத்தல், களஞ்சியப்படுத்தல் கணினிக் கிளையினால் செய்யப்படுகின்ற விசேட பணிகளாகும். அதன்படி தினமும் தரவு மீளப்பெறல் (Back Up) மற்றும் மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நிறுவப்பட்டுள்ள இத்திணைக்களத்தின் தரவு பாதுகாப்புத் தொகுதியினுள் (Data Recovery System) தரவுகளைக் களஞ்சியப்படுத்தல் நடைபெறும்.
7. AS 400 பிரதான தொகுதியின் தரவுகள், தரவு நிரற்படுத்தல் தொகுதியின் சான்றிதழ் தொகுதிகளை இற்றைப்படுத்தல்.
8. மேற்படி 07இல் குறிப்பிடப்பட்ட தொகுதியில் இடர் முகாமைத்துவ தொகுதியின் தரவுப் பாதுகாப்பு தொடர்பாக மேற்படி சோதனை.
9. திணைக்களத்திலுள்ள AS400 முறைமை , தேசிய கல்வி நிறுவகத்திலுள்ள மீள் முகாமை முறைமைக்குரிய செயற்பாட்டு முறைமைகளை (OS)2017 ஆம் ஆண்டில் V5R4 இலிருந்து V7R1 வரை இற்றைப்படுத்தல். அதற்கமைய உரிய முறைமைகளை விருத்தி செய்தல்.
10. திணைக்களத்தின் இணையத்தளத்தை மேலும் விருத்தி செய்தல் (தற்போது விருத்தி செய்யப்பட்டுள்ள Cloud இற்குள் நுழைவதற்கும் எதிர்கால நடவடிக்கைகளுக்கும்).

**2019 ஆம் ஆண்டிலும் இனிவரும் காலங்களிலும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் நிகழ்ச்சித்திட்டங்கள்**

01. SMS செய்தி மூலம் வளவாளர்களுக்கும் உரிய பகுதியினருக்கும் பரீட்சார்த்திகளுக்கும் தகவல்களை அனுப்பும் செயன்முறை ஆரம்பித்து அதனை நடைமுறைப்படுத்தப்படுத்துதல்.
02. இலங்கை அரச வலையமைப்பின் கீழ் 2.0 (LGN)இன்கீழ் Wi-Fi வலையமைப்பை திணைக்களத்தினுள் தாபித்தல்.
03. தெரிவு செய்யப்பட்ட பரீட்சைகளுக்காக விண்ணப்பம் கோருவதற்கு இலங்கைத் தபால் திணைக்களம், வேறு அரச நிறுவனங்களுடன் இணைந்து தொடரறா சேவை (online) மூலம் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை.
04. தேசிய பல்கலைக்கழக முறைமையுடன் இணைந்து திணைக்களத்துக்கான தகவல் முறைமையொன்றை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
05. மனிதவளத்தை இற்றைப்படுத்துவதற்காக திறன்விருத்தி அபிவிருத்திக்காக தேவையான கிளைகளின் அலுவலர்களை விசேட பயிற்சி நெறிகளுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

I. நிகழ்நிலை(Online) முறையில்பரீட்சையை நடத்துதலும் முகாமைத்துவமும்
11. ஆவணங்களை எண்முறைப்படுத்தல் (Digitilization)
111. Cloud Computing தொடர்பான தரவுப் பாதுகாப்பும் மீளப்பயன்படுத்தலும்
1V. இணைய வலைப்பின்னல் முகாமைத்துவம்
V. தரவுப்பாதுகாப்பும் முகாமைத்துவமும்

## 2.17 தரவு நிரற்படுத்தற் கிளை

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் கணினி மயப்படுத்தி நடாத்தப்படுகின்ற சகல பரீட்சைகள் தொடர்பான தரவுகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய திருத்தங்களை உள்ளடக்குதல், அப்பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் புள்ளிகளைப் பதிதல் என்பன இக்கிளையின் பணியாகும். இக்கிளைக்கு பாடசாலைப் பரீட்சைகளை ஒழுங்குபடுத்துதல், பெறுபேறுகள், மதிப்பீடு (பாடசாலைப் பரீட்சைகள்), ஒழுங்கமைப்பு, வெளிநாட்டுப் பரீட்சைகள் மற்றும் பெறுபேறுகள் (நிறுவனம் சார் பரீட்சைகள்) ஆகிய கிளைகள் மூலம் உரிய தகவல்கள் வழங்கப்படுகின்றன.

## 2.18 திட்ட அமுலாக்கல், கண்காணிப்புக் கிளை

திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை நடைமுறைப்படுத்தலும் இடைக்கால கல்வி பிரிவு திட்டமிடலை தயாரித்து கல்வி அமைச்சுக்கு சமர்ப்பித்தல்.

திணைக்களத்தின் அனைத்து கிளைகளினதும் மாதாந்த திட்டங்களையும் செய்துமுடிக்கப்பட்ட வேலை அறிக்கைகளையும் பெற்றுக்கொள்வதன் மூலம் இந்த திட்டமிடல், கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த அறிக்கைகள் மாதாந்தம், மும்மாதாந்தம் வருடாந்தம் தயாரிக்கப்பட்டு பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் கையளிக்கப்படும்.

திணைக்களத்தின் பெறுகை திட்டமிடல் தயாரிப்புக்கு தேவையான பௌதீக வளங்களை திட்டமிடல் வருடாந்தம் தயாரிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சின் மூலம் இத் திணைக்களத்தின் மறு சீரமைப்புக்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணத்துவ குழு அறிக்கையின் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்கு முறையான ஒரு திட்டமிடலை தயாரித்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பரீட்சை முகாமைத்துவ செயன்முறையை எண்முறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### தொழில்வாண்மை விருத்தி வேலைத்திட்டங்கள்

2018 ஆம் ஆண்டு க.பொ.த (உ/தர) மற்றும் க.பொ.த (சா/தர) பரீட்சைகளுக்காக மேலதிக மேற்பார்வையாளர்களை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்காக 1008 அலுவலர்களைப் பயிற்றுவித்து பரீட்சை நிலையங்களில் சேவையில் அமர்த்தப்பட்டனர்.

பரீட்சை மேற்பார்வையாளர்களாக கடமை மேற்கொள்வதற்கு பயிற்சிகள் வழங்கப்பட்ட இலங்கை அதிபர் சேவை தரம் III அலுவலர்களின் தகவல்கள் தொடர்பான தரவுத் தொகுதி இற்றைப்படுத்தப்பட்டு பேண் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாடசாலைப் பரீட்சைகள், நிறுவனம்சார் பரீட்சைகள் ஆகியவற்றை நடாத்துவதற்கு இந்த பயிற்சி பெற்ற அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இலங்கை கல்வி நிர்வாக சேவை (மட்டுப்படுத்தப்பட்ட) பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 108 அலுவலர்களுக்கும் 23 இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் புதிய அலுவலர்களுக்கும் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் கருமங்கள் தொடர்பாக அறிவூட்டுவதற்கான பயிற்சி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

திணைக்களத்தின் 12 பதவிநிலை அலுவலர்களும் 7 தகவல் தொழில்நுட்ப சேவை அலுவலர்களும் university Putra , Malaysia இல் Online Examination Management வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டனர். இதனால் வெளிநாடுகளில் பரீட்சையை நடாத்துவதற்கு பயன்படுத்தப்படும் புதிய வழிமுறைகள் தொடர்பாக விளக்கத்தை பெற்றுக் கொள்வது எதிர்பார்க்கப்படுகிறது.

திணைக்களத்தின் பதவியை அலுவலர்களுக்கு தலைமைத்துவ திறனை அதிகரிப்பதற்குத் தேவையான Out Bond Training வேலைத்திட்டத்தை நடாத்துதல்.

திணைக்களத்தில் கடமையாற்ற வருகைதருகின்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையின் புதிய அலுவலர்களுக்குத் தேவையான தொழில் ரீதியாக முன்மாதிரியை காட்டும் நோக்கிலான 6 மொடியூல்கள் அச்சிடப்படுவதுடன் அதற்கேற்ப பயிற்சி செயலமர்வுகளும் நடாத்தப்பட்டன.

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் 108 அலுவலர்களுக்கான அலுவலக முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டது.

இலங்கை பரீட்சை திணைக்களத்திற்கான தாபன விதிக்கோவையின் சட்டங்களின் கையேடு தயாரிக்கப்பட்டு அச்சிடப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திணைக்கள சுற்றாடலில் புதிய ஆறு மாடி பல்வேலை கட்டிட தொகுதியை கட்டி முடிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இந்தக் கட்டிடங்களினூடாக நவீன பரீட்சை மண்டபம், நவீன மதிப்பீட்டு நிலையம் மற்றும் பல செயல் கேட்போர் கூடம் போன்ற வசதிகளைக் கொண்டுள்ளது.

- ஆரம்பமாகும் திகதி - 2017.02.02
- முடிவுறும் திகதி - 2019.02.02
- உத்தேச செலவு - ரூ.மில்லியன் 615
- முன்னெடுக்கும் நிறுவனம் - அரச பொறியியற் கூட்டுத்தாபனம் (SEC)
- ஆலோசனை வழங்கும் நிறுவனம் - மத்திய பொறியியலாளர் ஆலோசனைப் பணியகம் (CECB)
- தற்போது செய்யப்பட்ட செலவு - ரூ.237.5 மில்லியன்